இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 126 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 30 – சனிக்கிழமை 16 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 126: Thiruvalluvar Year - 2054 - Karthigai 30 - Saturday 16 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00

# மாநாட்டில் அணிவிக்கும் மணிமுத்து மாலை!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இளைஞரணி மாநில மாநாடு நடைபெறும் திருநெல்வேலி மாவட்டத்தில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் வேளாண்மையை நம்பித்தான் வாழ்கின்றனர். தாமிரபரணி ஆறு மாவட்டத்தின் பாசன வசதிக்கும் வேளாண்மைக்கும் பெரிதும் பயன்பட்டு வருகிறது. சிற்றாறு, மணிமுத்தாறு, சீராறு ஆகியனவும் நெல்லை மாவட்ட வேளாண்மைக்கு உதவிக்கரம் நீட்டுகின்றன.

நெல்லை மாவட்டத்துக்கு, வடகிழக்குப் பருவ மழைதான் அதிகப் பயன் விளைக்கிறது. இந்த மழையின் உதவியால்தான் நெல் சாகுபடி வெற்றிகரமாக இங்கே நடைபெறுகிறது. தென் மேற்குப் பருவ மழை குறுகிய கால கார் நெல் விளைச்சலுக்கு உதவியாக இருக்கும்.

திருநெல்வேலி என்பது அழகான பெயர். "நெல்" என்ற சொல் இந்த ஊரின் பெயரிலேயே நடுநாயகமாக விளங்குகின்றது. எனவே நெல்லை மாவட்டத்தில் நெல் விளைச்சல் முக்கியமாக இருப்பது பொருத்தமானதுதானே? இந்த மாவட்டத்தின் மொத்த தானிய உற்பத்தியில் 70 சதவிகிதம் நெல்தான். நெல் தவிர பருத்தி, கம்பு, சோளம், எள், ராகி போன்ற தானியங்களும் பயிராகின்றன.

நெல்லைச் சீமையில் நீர்வளம், நிலவளம் பற்றிக் குறிப்பிட்டேன். மாநாட்டில் கூடிடும் இளைஞர்களின் மன வளம் பற்றியும் - அவர்களின் மகிமை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவர்கள் நல்கிடும் தூய தொண்டு பற்றி அறிந்து கொள்ளல் வேண்டாமோ?

அங்கு நடைபெறும் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இது இளைஞர் அணி மாநாடு என்பதாலோ என்னவோ, இந்த முறை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அதற்கான பணிகள் எல்லாமே மிகவும் விறு விறுப்புடனும், விரிவாகவும் நடத்தப்பட்டு வருவதைக் காண்கிறேன்.


மாநாடு நடைபெறும் இடத்தை தேர்வு செய்யவும், அங்கே பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும் இளைஞர் அணியின் செயலாளரும், மாநாட்டின் தலைவருமான தம்பி மு.க. ஸ்டாலின் இரண்டு மூன்று முறை நெல்லைக்குச் சென்று வந்துள்ளார். நெல்லை மாவட்டத்திலே உள்ள கழக முன்னணியினர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி கருப்பசாமி பாண்டியன் மற்றும் கழக முன்னணியினர் - வழக்கறிஞரும், நெல்லை மாநகர மேயருமான ஏ.எல்.சுப்பிரமணியம், மத்திய இணை அமைச்சர் ராதிகா செல்வி, மாநில அமைச்சர்கள் மைதீன் கான், பூங்கோதை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் மாலைராஜா, அப்பாவு மற்றும் சுப சீத்தாராமன், ச. தங்கவேல். எஸ்.எஸ். மைதீன், வரவேற்புக் குழுத் தலைவர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கா.முத்துராமலிங்கம், வரவேற்புக் குழுச் செயலாளர்கள் வே. கோமதி நாயகம், யூ.எஸ். டி.சீனிவாசன், க.ரவி மற்றும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்டத்திலே உள்ள இளைஞர்களின் ஒத்துழைப்போடும் பந்தல் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டு மாநாட்டுக்காக; கொட்டகைகள் அல்ல; கோட்டைக் கொத்தளங்களை அமைத்து வருகிறார்கள்.

## கலைஞர் கடிதம்

மாநாட்டு வேலைகளை மேற்பார்வையிடச் சென்ற தம்பி ஸ்டாலினுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பே, மாநாட்டிற்கு வருகை தருவோருக்கு அளிக்கப்படும் மகத்தான வரவேற்பையொத்ததாக இருந்ததென்று என்னிடம் தெரிவித்தார்கள். மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக தம்பி ராஜா முன்னிலையேற்றிட இளைஞர் அணியினரின் எழுச்சி மிகு அணிவகுப்பு நடைபெறவுள்ளது. அணிவகுப்பிலே கலந்து கொள்வோர் கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்திதான் கலந்து கொள்ள வேண்டுமென்று அறிவிக்க வேண்டுமா; என்ன? கொடிக்காடுகளே வீதிகளில் காண முடிகிறதே!

ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் செயல் வீரர்களின் கூட்டங்கள் கூட்டப்பெற்று, அந்தந்த மாவட்





டங்களின் சார்பில் நெல்லை மாநாட்டில் கலந்து கொள்ள செல்வதற்கான ஏற்பாடுகள் எல்லாம் வகுக்கப்பட்டுள்ளன. என்னைச் சந்திக்கும் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்திலிருந்து 200 பேருந்துகள் புறப்படவுள்ளன, 100 பேருந்துகளுக்கு முன் தொகை கட்டப்பட்டுள்ளது என்றெல்லாம் தகவல் தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் சொல்கின்ற செய்திகளை கேட்கும்போது, இத்தனை பேருக்கும் நெல்லைச் சீமையிலே இடம் இருக்குமா என்ற ஐயம் எனக்கேற்பட்டுள்ளது.

மாநாட்டுப் பந்தல் 800 மீட்டர் நீளம், 400 மீட்டர் அகலத்தில் அமையவுள்ளது. சுமார் ஐந்து இலட்சம் பேர் வரை தாராளமாக கலந்து கொள்ளலாம். மேடை மட்டும் 70 அடி நீளம், 56 அடி அகலத்தில் நிறுவப்படுகிறதாம். இளைஞர் அணியினரின் அணி வகுப்பு 4 கி. மீட்டர் தொலைவிற்கு இருக்கும். நானும், பொதுச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடிகளும் அணிவகுப்பினை ஓரிடத்தில் அமர்ந்தவாறு பார்க்கவுள்ளோம். கழகத்தின் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கும், குறிப்பாக இளையவர்களுக்கும் மாநாட்டில் பேசுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். பேச்சாளர்களின் பெயர்களும், பேசுவதற்கான தலைப்பும் இளைஞர் அணியின் செயலாளரால் இரண்டொரு நாட்களில் வெளியிடப்படும். மாநாட்டில் அதிகம் பேர் பேசிட விரும்புவார்கள் என்பதால், பேச்சாளர்கள் தங்களது பேச்சினை குறள் போல அமைத்துக் கொண்டு, குறுந்தொகையென

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 'திராவிட மாடல்' ஆட்சியின்

# வெற்றி மகுடத்தில் மேலும் ஓர் வைரம்!

## 'மக்களுடன் முதல்வர்' திட்டம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச. 16-**

**'மக்களுடன் முதல்வர் திட்டம்' திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி மகுடத்தில் மேலும் ஓர் வைரம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதத்துடன் பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பதிவு வருமாறு:–

உங்களில் ஒருவனான என்னை, உங்களுக்கான ஒருவனாக உருவாக்கி முதலமைச்சர் பொறுப்பை ஏற்க வைத்தீர்கள்.

நமக்கு வாக்களிக்காத மாற்றுச் சிந்தனை கொண்டோரும் 'தி.மு.க.வுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே!' என்று எண்ணும் வகையிலான மக்கள் நலன் பேணும் ஆட்சியைக் கட்டமைத்து வருகிறோம்.

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- விடியல் பயணம்
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்



- புதுமைப்பெண் திட்டம்
- இல்லம் தேடிக் கல்வி
- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48
- நான் முதல்வன்

– போன்ற நமது 'திராவிட மாடல்' அரசின் திட்டங்கள் அனைத்தும் உங்களை வந்து சேர்வதை உறுதிசெய்திட 'கள ஆய்வில் முதலமைச்சர்' என உங்கள் மாவட்டங்களுக்கு வந்தேன்.

இதனை இன்னும் செம்மைப்படுத்திட வேண்டுமல்லவா!

உங்களின் தேவைகளும் அரசின் சேவைகளும் ஒரு குடையின்கீழ் சந்தித்து விரைவில் தீர்வுகள் கிடைத்தால் அது திராவிட மாடலின் வெற்றி மகுடத்தில் மேலும் ஒரு வைரம் என மின்னிடுமே!

அப்படியான திட்டமாக உருப்பெறுகிறது மக்களுடன்முதல்வர் திட்டம்!

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க (நாளை மறுதினம்) திங்களன்று கோவைக்கு வருகிறேன்...

அமைச்சர் பெருமக்கள், மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு இந்தத் திட்டத்தின் பயன் மக்களைச் சென்றடைய உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், 7 அதி உயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி என்.ப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ. 6000 நிவாரணம்: 2வது நாளாக டோக்கன் விநியோகம்!

*சென்னை, டிச. 16-*

*மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழ்நாடு அரசு அறிவித்த 6 ஆயிரம் ரூபாய் நிவாரணம் பெறுவதற்காக 2வது நாளாக டோக்கன் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

*மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். புயல் நிவாரணம் நியாய விலை கடைகள் மூலம் ரொக்கமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. நிவாரணம் பெறுவதற்கான டோக்கன் விநியோகம் நேற்று தொடங்கியது. நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. இந்நிலையில், இன்று 2வது நாளாக டோக்கன் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு இடங்களில் நியாய விலைக்கடை ஊழியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் வீடு வீடாக சென்று டோக்கன் விநியோகம் செய்து வருகின்றனர்.*

*வருகிற ஞாயிற்றுக் கிழமை முதல் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை ரொக்கமாக வழங்கப்பட உள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 16-12-2023

# நாடாளுமன்றம் எதற்கு?

நாட்டைப் பற்றிப் பேசுவதற்குத்தான் ‘அனுமதிக்க மாட்டேன்’ என்கிறார்கள் என்றால், நாடாளுமன்றத்தைப் பற்றிப் பேசுவதற்கே நாடாளுமன்றத்தில் அனுமதி இல்லை. பின்னர், நாடாளுமன்றம் எதற்கு? மியூசியமா அது?

**“நாடாளுமன்றத்தில் நேற்று வீசப்பட்டது விஷ வாயுவாக இருந்திருக்குமானால் பலரும் கொல்லப்பட்டிருப்பார்கள்” என்று காங்கிரசு உறுப்பினர் அதிரஞ்சன் சவுத்திரி சொல்லி இருக்கிறார். இப்படி நடந்திருந்தால் என்ன ஆகி இருக்கும்?**

கடந்த 13 ஆம் தேதியன்று நாடாளுமன்றத்துக்குள் வந்து புகைக் குண்டு வீசி இருக்கிறார்கள் இருவர். மற்ற இரண்டு பேர் நாடாளுமன்றத்துக்கு வெளியில் வீசி இருக்கிறார்கள். இப்படி வீசியவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் ஓடிப் போய் பிடித்தார்களே தவிர பாதுகாவலர்கள் அல்ல. **‘இது ஆபத்தான குண்டு அல்ல’ என்று விளக்கம் கொடுக்கிறார் சபாநாயகர் ஓம் பிர்லா. இதுதான் இந்திய நாட்டின் நாடாளுமன்றத்துக்கு உள்ள பாதுகாப்பு ஆகும்.**

நாடாளுமன்றக் கட்டடத்தையே பாதுகாக்கத் தவறியவர்கள், இந்திய நாட்டை எப்படிப் பாதுகாப்பார்கள் என்ற கேள்வியால் பிரதமரும் உள்துறை அமைச்சரும் பா.ஜ.க. தலைமையும் தலை கவிழ்ந்து கிடக்கிறார்கள். இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில், எதுவுமே நடக்காதது மாதிரி நாடாளுமன்றத்தை நடத்திக் கொண்டும் இருந்தார்கள்.

மறுநாள் 14ஆம் தேதியாவது நாடாளுமன்றத்தில் உரிய விளக்கம் தரப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. ‘கடப்பாறையை விழுங்கிவிட்டு கசாயம் குடித்தால் போதும்’ என்பதைப் போல உட்கார்ந்து கொண்டது ஒன்றிய அரசு.

நாட்டின் நாடாளுமன்றத்தில் புகைக் குண்டு வீசப்பட்டது குறித்து நாடாளுமன்றம் விசாரிக்க வேண்டாமா? இது தொடர்பாக உறுப்பினர்கள் கேள்வி கேட்க வேண்டாமா? நேரடியாகப் பார்த்த உறுப்பினர்கள் அதனைச் சுட்டிக் காட்ட வேண்டாமா? இது தொடர்பான விசாரணைகளை உள்துறை அமைச்சர் விளக்க வேண்டாமா? - இவை எதுவுமே நடக்கவில்லை.

தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைவரும், ‘நாடாளுமன்றத்துக்குள் நடந்த புகைக்குண்டு வீச்சு சம்பந்தமாக விவாதம் நடத்த வேண்டும். இறுதியாக உள்துறை அமைச்சர் அமித்ஷா பதில் சொல்ல வேண்டும்’ என்று கோரிக்கை முழக்கம் எழுப்பினார்கள். 2 பேர் நோட்டீஸ் கொடுத்தால் கூட விவாதம் நடத்துவார்கள். ஆனால் 28 பேர் நோட்டீஸ் கொடுத்தும் விவாதிக்கவில்லை.

“உரிய விசாரணை நடத்தி வருவதால் விவாதம் தேவை இல்லை” என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி சொன்னார். என்ன விசாரணை நடைபெறுகிறது என்பதையாவது நாடாளுமன்றத்துக்குச் சொல்ல வேண்டாமா? “பிரதமர், உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் பதிலளிக்கும் வரை பிரச்சினை எழுப்புவோம்” என்று எதிர்க்கட்சிகள் சொன்னார்கள். அதில் உறுதியாக இருந்தார்கள். பிரதமரும், உள்துறை அமைச்சரும் அவைக்கே வரவில்லை.

நாடாளுமன்றத்துக்குள் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரிக்கை முழக்கமிட்ட உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்தார் சபாநாயகர். தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி, சேலம் பார்த்திபன், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களான ஜோதிமணி, மாணிக்கம் தாகூர், பிரதாபன், ஹபி ஈடன், ரம்யா ஹரிதாஸ், டீன் குரியகோஸ், வி.கே.ஸ்ரீகண்டன், பென்னி பெஹனான், முகமது ஜாவேத் ஆகியோரும், மார்க்சிஸ்ட் உறுப்பினர்களான நடராஜன், சு.வெங்கடேசன் ஆகியோரும், இந்தியக் கம்யூனிஸ்ட் உறுப்பினரான சுப்பராயனும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். மொத்தம் 13 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் தி.மு.க. உறுப்பினரான சேலம் பார்த்திபன், அன்றைய தினம் அவைக்கு வரவில்லை. அவரையும் சஸ்பெண்ட் செய்துவிட்டார்கள். ‘அவைக்கே வராதவர் எப்படி முழக்கம் எழுப்பி இருக்க முடியும்?’ என்று தி.மு.க. எம்.பி.க்கள் கேட்டதும், பார்த்திபன் மீதான நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டது. ‘அடையாளம் காண்பதில் ஏற்பட்ட தவறு’ என்று விளக்கம் அளித்தார் அமைச்சர் பிரகலாத் ஜோஷி. இவர்களுக்கு உறுப்பினர்களையும் அடையாளம் தெரியவில்லை, குண்டு போடுபவர்களையும் அடையாளம் தெரியவில்லை.

**புகைக் குண்டு வீசியவர்களுக்கு அனுமதி பாஸ் கொடுத்தவர் பா.ஜ.க. எம்.பி. அவர் சபைக்குள் இருக்கிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் அது பற்றி கேள்வி எழுப்பிய உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். “குற்றவாளிகளுக்கு பாஸ் வழங்கிய எம்.பி. மீது கைது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தினார். அதற்கு எந்தப் பதிலும் இல்லை.**

“மஹுவா மொய்த்ரா பிரச்சினையை விட, தீவிரவாதிகளுக்கு பா.ஜ.க. எம்.பி., பிரதாப் சிம்பா, பாஸ் வழங்கப் பரிந்துரைத்தது கடுமையான விதி மீறல். தேசப் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது” என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தர்கள். பாஸ் வழங்கியது குறித்து பா.ஜ.க. எம்.பி. இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

நாடாளுமன்றப் பாதுகாப்பில் மிகப்பெரிய குளறுபடி உள்ளது. நாடாளுமன்றப் பாதுகாப்புப் பிரிவு இணை இயக்குனர் பதவி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக காலியாக இருக்கிறது. பாதுகாப்புப் பணியில் 301 காவலர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 176 பேர் மட்டுமே பணியில் இருப்பதும் தெரிய வந்துள்ளது. நாடாளுமன்ற புதிய கட்டிடத்தின் பாதுகாப்புக்காக புதிய நியமனங்கள் நடத்தவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள் 7 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வளவுதான்.

நாடாளுமன்றத்தில் புகைக்குண்டு போட்ட மனோரஞ்சன் என்பவர், ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரின் போதும் பார்வையாளர் பாஸ் பெற்று நாடாளுமன்றம் வந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது. உள்ளே புகுந்தவர்கள் இரண்டு பேர் மட்டுமல்ல, வெளியே இவர்களது ஆட்கள் அதிகம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதைப் பற்றி எல்லாம் ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டாமா? இதைக் கேள்வி கேட்பது தவறா?

**அதானியைப் பற்றிப் பேசினால் டிஸ்மிஸ், நாடாளுமன்ற அச்சுறுத்தல் பற்றிப் பேசினால் சஸ்பெண்ட் - இவைதான் பா.ஜ.க.வின் ஜனநாயகப் பாதையாக இருக்கிறது.**

## சென்னை - கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள்!

### தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, டிச. 16 –

சபரிமலை சீசனையொட்டி, சென்னை – கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இன்று பிற்பகல் தாம்பரத்தில் இருந்து சிறப்பு ரயில் புறப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சபரிமலை ஐயப்ப கோவில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைகளுக்காக கடந்த மாதம் 17ந் தேதி நடை திறக்கப்பட்டது. சபரிமலையில் கடந்த ஆண்டுகளை விட வரலாறு காணாத பெரும் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. பொதுவாக சபரிமலை ஐயப்பன் கோவிலில் சராசரியாக 65,000 பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்வர். ஆனால் நடப்பாண்டில் சராசரியாக 80,000 முதல் 90,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர். இதனால் தரிசன நேரமும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், பல்வேறு முக்கிய நகரங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. அந்த வகையில், தாம்பரம் – கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர்களின் ஒருநாள் சம்பளத் தொகையான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், வேளாண்மை – உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கீதாலட்சுமி ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக, தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழக பயிற்சி நிலையத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். செங்கல்பட்டு மாவட்டம், தையூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.63.30 கோடி மதிப்பில்

## தீயணைப்பு - மீட்புப் பணிக்கான ஊர்திகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 16-**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான ஊர்திகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, “காக்கும் பணி எங்கள் பணி” என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவை ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட அரசு பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில், பலமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை சமாளிக்க 54 மீட்டர் உயரம் வரை வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், மலைப்பாங்கான இடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களை கையாள்வதற்கு நான்கு சக்கர இயக்கம் கொண்ட 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், தீ விபத்திடங்களில் ஏற்படும் தண்ணீர் தேவையினை உடனடியாக சமாளிக்க 12 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், பழுதடைந்த நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவை 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஊர்திகளை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ப. அமுதா, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி என். ப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 100 பயனாளிகளுக்கு – தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்

## பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் - ரூ.1.32 கோடி கடனுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை கடனுதவியாக வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாகச் செயல்பட்டு வருகிறது. இக்கழகமானது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

2023-24 ஆம் நிதியாண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக, 7 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும், மீதமுள்ள 93 பயனாளிகளுக்கு இன்றையதினமே சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அன்னை தெரசா வளாக கூட்டரங்கில் நடைபெறும் விழாவில், அமைச்சர் பெருமக்களால் கடனுதவிக்கான காசோலைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், பயனாளிகள் வளையல் வியாபாரம், பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டு நெசவு, தையல் தொழில், அழகு நிலையம், பலசரக்கு கடை, உணவகம், துணிக்கடை, தேங்காய் மற்றும் காய்கறி வியாபாரம் போன்ற தொழில்களை மேற்கொள்ள கடனுதவி வழங்கப்படுகிறது.

இக்கழகத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக அதிகபட்சமாக நபர் ஒருவருக்கு ரூ.15 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா. சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாநாட்டில் அணிவிக்கும் மணிமுத்து மாலை!

## கலைஞர் கழதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

குறைந்த நேரத்தில் நிறைவாக பேசத்தக்க வகையில் முன்கூட்டியே தயாரித்துக் கொண்டு பேசுவார்கள்.

அணிவகுப்பிலே வரும்போது, தாங்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை விளக்கிடும் வகையில் மாவட்ட சார்பில் முன் பகுதியில் வருவோர் எந்த மாவட்டம் என்ற பதாகையினை ஏந்தி வருவார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் பத்தாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர், இருபதாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர் என்றெல்லாம் அன்றாடம் ஏடுகளில் வரும் செய்திகள், வெறும் செய்திகளாக மட்டுமல்லாமல், உண்மையில் அத்தனை பேர் பங்கேற்கும் வகையில் இப்போதிருந்தே பணியாற்றுகின்றனர்.

நெல்லை மாவட்டக் கழகச் சார்பிலும், இளைஞர் அணியின் சார்பிலும், மாநாடு பற்றிய விவரங் களையெல்லாம் செய்தியாளர்களுக்கு ஏற்கனவே தெரிவித்து அவை ஏடுகளில் வந்துள்ளன.

தமிழகத்தின் தென்கோடியில் நடைபெறும் மாநாட்டிற்கு நீண்ட தூரத்திலிருந்து பயணம் செய்து வருவோர் பாதுகாப்பாக வந்திட வேண்டும். வாகனங்களில் வருவோர் மிகுந்த எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். இரவுப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

இதற்காகவே எழுதியது போல ஒரு கட்டுரை - நமது தமிழர் தலைவரும் நெல்லை இளைஞர் அணி மாநாட்டில் முதல் நாள் மாலை நிகழ்ச்சிக்கு தலைமையேற்க இருப்பவருமான வீரமணி அவர்களின் "வாழ்வியல் சிந்தனைகள்" பற்றிய கருத்துப் புதையலை நினைவூட்ட விரும்புகிறேன். வாழ்வியலுக்கு வகையான - தேவையான - பல கருத்துக்களை - அறிவுரைகளை உள்ளடக்கிய கட்டுரைகளின் தொகுப்பு அது.

அதில் இந்தக் கட்டுரை வருமாறு :

★ "நாளும் வானொலி, தொலைக்காட்சி, ஏடுகளில் செய்திகளில் தவறாது இடம் பெறுவது சாலை விபத்துக்கள். பல உயிர்கள் அன்றாடம் பலியாவது ஏதோ வானிலை, மார்க்கெட் நிலவரம் என்பன போன்று அன்றாட அவலச் செய்தியாகி வருவதும் மனித நேயம் படைத்தவர்களின் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கிறது!

மறைந்த ராம்நாத் கோயங்கா (தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனர்) அவர்களின் முக்கிய அறிவிப்பு ஒன்றை நான் அடிக்கடி நினைவு கூர்ந்து, மேற்கோளாகச் சொல்வதுண்டு.

"நான் எந்தச் சட்டங்களையும் மீறுவதற்குத் தயாராக இருப்பேன். ஆனால், ஒரே ஒரு சட்டத்தை மட்டும் மீறத் தயாராக இல்லை; அதுதான் போக்குவரத்து விதி பற்றிய சட்டம். காரணம், அது எனது உயிரைப் பாதுகாக்கவே ஏற்பட்டது என்ற நினைப்பு எனக்கு எப்போதும் உண்டு" என்பதே - அவரது அந்த அறிவுரை!

இது மிக வரவேற்கத்தக்க அறிவிப்பு அல்லவா? ஆனால், நம்மில் பலர் போக்குவரத்து விதிகளுக்கு கீழ்ப்படிவது என்பதை ஏதோ போலீஸ்காரருக்கு உதவுவது போல ஒரு தவறான சிந்தனையுடன் அல்லவா கீழ்ப்படிகிறோம்? இதைவிட வெட்கக்கேடு வேறு உண்டா?

மனித உயிர்களைப் பலி கொள்ளும் விபத்துக்கள் (Accident) என்பவை இமை மூடித் திறப்பதற்குள் எதிர்பாராது ஏற்படும் அதிர்ச்சிச் சம்பவம் ஆகும்!

வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது, நாம் கவனத்துடன் ஓட்டிச் சென்றால் மாத்திரம் போதாது; எதிர் வரும் வண்டி ஓட்டுநரின் கவனக் குறைவையும் எதிர்கொண்டு சமாளித்து ஓட்ட வேண்டிய இரட்டைப் பொறுப்பு உண்டு.

அதிவேகம் என்பது ஒரு ஓட்டுநருக்குப் பெருமை அல்ல; அதிக காலம் இவர் எந்தவிதத் தவறும் செய்யாத ஓட்டுநர் என்பதே நிரந்தரப் பெருமைக்குரியதாகும் என்பதை ஓட்டுநர் நண்பர்கள் மறக்கக் கூடாது!

சிலர் இரவு பத்து மணிக்கு மேல் போக்கு வரத்து விதி செயல்முறை கிடையாது என்று அறியாமையால் உளறுவதுண்டு; சட்டத்தின் முன் இரவென்ன? பகலென்ன? எல்லாம் அதற்கு ஒன்றுதானே! நினைவிற்கொள்வோமாக!

இரு சக்கர வாகனங்கள் வைத்து ஓட்டும் நடுத்தர வயதுள்ள மக்கள் -இளைஞர்கள் - மாணவ - மாணவிகள் எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கம் போல நாள்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. "கண் மண் தெரியாத" - இளங்கன்றுகளுக்குப் பயம் தெரியாது என்ற பழமொழிக்கொப்ப - விமான வேகத்தில் அதிக ஓசையைக் கிளப்பி ஓட்டுவதில் தனி உற்சாகம் கொள்வது அவர்களுக்கே பற்பல நேரங்களில் உயிர்க்கொல்லி ஆகிவிடுகிறது.

இதில் "செல்" போனில் பேசிக் கொண்டே ஓட்டுவது, எரிதழலில் நெய்யூற்றலாகி விடுகிறது! எதிரில் வாகனம் வருவதை திடீர் எனக் கண்டு திருப்பவோ, "பிரேக்" போடவோ முயன்று, தூக்கி எறியப்பட்டோ அல்லது எதிர் வாகனங்களில் சிக்கியோ மாளும் மாந்தர்கள்தான் எத்தனை பேர்?

என்னே கொடுமை?

தலைக் கவசம் (ஹெல்மெட்) போடுவது மிக மிக அவசியம். மூளைப் பகுதியில் பின் தலைப் பகுதியில் அடிபட்டு, பிழைத்தால்கூட பல உறுப்புக்கள் செயலிழக்கும் பேரபாயம் உண்டே! அதை அணிவதை ஏன் தவிர்க்க வேண்டும்? நமது பாதுகாப்புக்குத் தானே அது?

அதைவிடக் கொடுமை, இரு சக்கர வாகன ஓட்டிகள், வரிசையாக வாகனங்கள் செல்லும்போது "இண்டு இடுக்கு" சந்து தெரிந்தால்கூட உடனே நுழைந்து பறக்கத் தொடங்கி, ஒரே அடியாய் பறந்தே விடுகின்றனரே!

இதில் இன்னொரு கொடுமை - அந்த வாகனம் இன்னொருவரிடமிருந்து இரவல் வாங்கிய வாகனம். அதனால் ஏற்படும் நட்டம் உயிர்ச் சேதம், மற்றவருக்கு பொருள் இழப்பு, வழக்கில் சிக்குபவர் வாகன உரிமையாளரே! அதைவிட மேலும் ஒரு "போனஸ் கொடுமை" அந்த வண்டியில் எரிசக்தி நிரப்பித் தராமல், காலி செய்து விட்டு அவரிடம் திருப்பித் தரும் அநாகரிகச் செயல்.

இப்படியா வாழ்க்கையை ஓட்ட வேண்டும்?

எண்ணுக! உயிர்க் கொல்லிகளுக்கு அழைப்பு விடுத்து, ஆயுளை முடித்துக் கொள்ளாதீர்கள் நண்பர்களே!

மனித உயிர் விலை மதிப்பற்றது! நல்லவர்களை இழந்து கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் பல குடும்பங்கள் - பெற்றோர்கள் சார்பாகவே இந்த வேண்டுகோள்.

போக்குவரத்து விதிகளின்படி பயணம் செய்யப் பழகுவீர்!

அவ்விதிகள் நம் உயிர் காக்கும் தோழன் - துணைவன் என்பதை மறவாதீர்!"

★★

உடன்பிறப்பே, பேராயர் வின்சென்ட் சின்னதுரை சிறப்புடன் ஏற்பாடு செய்துள்ள சீர்மிகு நிகழ்ச்சி - கலைஞர் காவியம் 84 - தமிழர் தலைவர் வீரமணியார் தலைமை ஏற்கும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வாழ்த்துரை வழங்க - கவிப்பேரரசு தம்பி வைரமுத்து வருகிறார். அவர் எழுதிக் குவித்துள்ள கவிதைக் கருவூலத்தில் என் கண்ணில் பட்ட கருத்துக் கவிதையொன்றை இதோ; உன் போன்றோர் கருதிட தருகிறேன்.

"தெற்கே தெற்கே ஜாதிகள் மூட்டும்
தீயே பற்றாதே! - பழங்
கற்காலத்துப் பாம்பே! எங்கள்
காலைச் சுற்றாதே!

மண்பானைகளும் மண்பானைகளும்
மல்லுக்கு நிற்பதுவோ - இங்கே
கண்ணீர்த்துளிகளும் கண்ணீர்த்துளிகளும்
கைகள் கலப்பதுவோ?

தாழ்த்தப்பட்டவர் ஒடுக்கப்பட்டவர்
சண்டை பிடிக்கையிலே - அங்கே
வீழ்த்தப்படுவதும் வெல்லப்படுவதும்
வேறோர் இனம(ல்)லவே!

முந்நூற்றாண்டை முன்னுக் கிழுக்குது
முரட்டு விஞ்ஞானம் - நாமோ
முந்நூறாண்டு பின்னே செல்வது
முழுக்க அஞ்ஞானம்

அந்நிய ரோடு சண்டை செய்தது
ஆறோ ஏழோதான் - சொந்த
மண்ணவரோடு சண்டை கொண்டது
மணலினும் அதிகம்தான்

செயற்கை மனிதன் செவ்வாய்த் தரையில்
சிற்றில் ஆடுகையில் - இங்கே
இயற்கை மனிதர் ஜாதிச் சண்டையில்
இடுப்பு முறிவதுவோ?

நீண்ட நாள்முதல் யாரோ விதைத்த
நெருப்பின் மிச்சத்தில் - மண்ணை
ஆண்ட பரம்பரை இன்று வரைக்கும்
அழிந்து கருகுவதோ?

புதைந்த தமிழின் சங்கம் மூன்றைப்
புதுக்க எண்ணாமல் - நம்மைப்
புதைக்கும் ஜாதிச் சங்கத்துக்குள்
புதைந்து போவீரோ?

வறுமை ஏழ்மை பேதைமைக் கெதிராய்
வாளை எடுக்காமல் - நாம்
ஒருவரை ஒருவர் எரித்து மகிழும்
உற்சவம் நடத்துவதோ?

புத்தகம் ஈந்து கல்விச் சாலை
போகும் சிறுவர்களைக் - கையில்
கத்திகள் தந்து ஜாதிக் களத்தில்
கருகச் செய்வீரோ?

மனிதன் என்னும் நிஜத்தை நீங்கள்
மறந்து தொலைத்துவிட்டு - ஜாதிச்
சனியன் என்னும் கற்பனைக்காகச்
சமர்கள் புரிகுவதோ?

ஆயுதங்களைக் கட்டும் கைகாள்
அணைகள் கட்டுங்கள் - அந்த
ஆயுதங்களை உருக்கி உருக்கி
ஆலைகள் எழுப்புங்கள்

சிறைகள் எடுக்கும் செலவில் நீங்கள்
சிறகுகள் வாங்குங்கள் - வீணே
தரையில் சிதறும் ரத்தம் போதும்
தானம் புரியுங்கள்

முன்னே வள்ளுவன் பின்னே பாரதி
முழங்கினர் ஊருக்கு - அட
இன்னும் நீங்கள் திருந்தா விட்டால்
இலக்கியம் ஏதுக்கு?"

★★

உடன்பிறப்பே, எழுதி எழுதிக் குவிக்கிறாயே; நோகாதா உடல்? தாங்குகிறதா வயது? கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு எழுதலாமே! இப்படி என்னைச் சுற்றிக் குரல்கள்!

என் செய்வது? எழுதும் வரையில்தான் வலி தெரிகிறது! எழுதிடப் பேனா எடுத்தவுடன் - உடன்பிறப்பே, என்று எழுதத் தொடங்கியவுடன்; அந்த வலியும் வேதனையும் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை!

ஆறு பக்கங்கள், ஏழு பக்கங்கள் எழுதும்போது அசதி வந்து எட்டிப் பார்க்கும் - அலுப்பு வந்து ஆட்டம் போடும் -ஆனால் இறுதியாக "உடன்பிறப்பே" என்று எழுதி முடித்தவுடன் அந்தச் சொல்லுக்குத்தான் என்ன சிறப்பு? என்ன ஓர் உணர்ச்சி? என்ன அப்படியொரு மெய்ச் சிலிர்ப்பு?

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தின் தலைப்பு "மணிமுத்து மாலை" என்பதற்குப் பொருள் புரிகிறதா?

வீரமணியின் கருத்துரையும், வைரமுத்துவின் கவிதை ஆக்கமும் இணைந்தால் - "மணிமுத்து மாலை" ஆகின்றதன்றோ? அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்!

"மணிமுத்து" என்று! - அது மாலையாகும்போது எத்துணை மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியை மாநில மாநாட்டில் மலரும் இளைஞர் இதயம்; சமூகங்களுக்கிடையே உருவாக்கிட உதவட்டும்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 29.11.2007)

தையூரில் உள்ள - தமிழ்நாடு கட்டுமானக் கழகப் பயிற்சி நிலையத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு

# இலவச திறன் பயிற்சி - உதவித் தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக, தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழக பயிற்சி நிலையத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியையும் தொடங்கி வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழுக்களின் தலைவராக தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், துணைத் தலைவராக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத் தலைவரும், உறுப்பினர் செயலாளராக தொழிலாளர் ஆணையரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசுத் தரப்புப் பிரதிநியாக தொழிலாளர் நலத் துறைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும், பொதுப் பணி துறைச் செயலாளரும், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் CREDAI, Builders Association of India (BAI), CII, FICCI மற்றும் Construction Industrial Developmental Council (CIDC) பிரதிநிதிகளும் ஆட்சிமன்றக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கட்டுமானக் கழகம், அரசு மற்றும் தனியார் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மூலம் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கட்டுமானத் தொழில் சார்ந்த நவீனப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட மாதிரி நலத்திட்டத்தின் (Modified Model Welfare Scheme) அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களும் அவர்களுடைய வாரிசுதாரர்களும் திறன் மேம்பாடு பெறுவதற்கு ஏதுவாக மாநில அரசின் திறன் மேம்பாட்டுக் கழகம் / ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை / தேசிய திறன் மேம்பாட்டு கழகம் இவற்றின் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், உதவித்தொகையும், பயிற்சிக்கான கட்டணமும் வழங்கப்படுகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூன்றாவது ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் 24.08.2022 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தை மறு சீரமைக்கத் தீர்மானி க்கப்பட்டு சென்னை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரிய கட்டடத்திலிருந்து, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 23 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்கள் 54 வகையான தொழில் இனங்களில் பதிவு செய்துள்ளனர். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தங்களுடைய தொழிலினை திறம்படச் செய்யவும், புதிதாக தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் திறன் பெற ஏதுவாகவும் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரிசியன் உள்ளிட்ட 5 தொழில் இனங்களில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 3 மாதங்கள் திறன் பயிற்சியும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்!**

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் இப்பயிற்சி வழங்க ஏதுவாக கட்டுமானத் தொழில் வளர்ச்சிக் குழுமம் (CIDC) மற்றும் L&T கட்டுமான பயிற்சி நிலையம் (Larsen & Toubro Limited L&T Construction) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஏற்படுத்தப் பட்டது.

7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு (Skill Upgradation Training) வரும் தொழிலாளர்களுக்கு தினசரி ரூ.800/ வேலை திறன் இழப்பீட்டு உதவித்தொகையும், இலவசத் தங்குமிடமும், 3 மாதங்கள் திறன் பயிற்சியில் (Skill Development Training) கலந்து கொள்பவர்களுக்கு உணவு, தங்குமிடமும் இலவசமாக வழங்கப்படும். மேலும் பயிற்சிக் கட்டணம் ஏதும் இல்லை.

2023-2024க்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானிய கோரிக்கையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரிசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1000 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**நிதி ஒதுக்கீடு!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, 4000 தொழிலாளர்களுக்கு ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 1000 தொழிலாளர்களுக்கு மூன்று மாதகால திறன் பயிற்சியும் ஆண்டுதோறும் தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் வழங்கிட 5 கோடியே 86 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு நிதியாண்டிலும் 5000 கட்டுமான தொழிலாளர்கள் பயிற்சி பெற்று பலன் பெறுவர். இப்பயிற்சியின் வாயிலாக தொழிலாளர்களின் தொழில்திறன் மற்றும் ஆற்றல் மேம்பட்டு, தனியார் நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்று அவர்களது வாழ்வாதாரம் உயர வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், தையூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், தமிழ்நாடு கட்டுமானக் கழக இயக்குநர் டி. தர்மசீலன், திருப்போரூர் ஒன்றிய குழுத் தலைவர் இதயவர்மன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் நேற்று (15–12–2023) மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக் கப்பட்ட சைதை கிழக்குப் பகுதியில் உள்ள பள்ளிப்பட்டு, வரதாபுரம், அண்ணா தெரு, அண்ணா பல்கலைக்கழக பணியாளர் கள் குடியிருப்பு, ஸ்ரீராம்நகர், களிக்குன்றம், சிப்ஸி காலனி, சத்யா நகர், உருவப்பன் தெரு, ஏரிக்கரை சாலை, பெருமாள் கோயில் தெரு, எல்லையம்மன் கோயில் தெரு, மண்ணப்ப தெரு, நாயுடு தெரு, யாதவாள் தெரு,புது தெரு ஆகிய தெருக்களில் வசிக்கும் 4000 குடும்பங்களுக்கும், ஆளுக்கு தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பால், பிஸ்கட், பிரட் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர்இரா.துரைராஜ் மற்றும் தி.மு.கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் வார்டு கிளைக் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் (BLA–2) பூத் இளைஞரணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். அருகில் ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர் விஜய குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் வடக்கு - தெற்கு ஒன்றியம் - பேரூர் கழகக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி - ந.கோபால்- பேரூர் இரா.சதீஷ்குமார் அறிக்கை!

திருப்பெரும்புதூர், டிச.16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழகம் சார்பில், சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டையொட்டி கிளை, வார்டு கழக, இளைஞர் அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு இளைஞர் அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (16.12.2023- சனிக்கிழமை) காலை 9 மணிக்கு, குரு மஹால், திருமங்கலம், சுங்குவார்சத்திரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தலைமை வகிக்கிறார். தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால், பேரூர் செயலாளர் இரா. சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலா என்கிற பால்ராஜ் மற்றும் ஜா. மதுரை ராஜன், கோ.சீனிவாசன், டி. மனோஜ்குமார், எஸ்.ஆர். சுதாகர், அ.பூபாலன், கு. தேவபிரசாத், வி.ராம் குமார், ஜி.மருதுபாண்டி, ப. புகழ்வாணன், ச.சுவாதிகன், ஐ.பழனி, க.நரேஷ்குமார், இரா.தட்சிணாமூர்த்தி, சி.வெங்கட், து.சதீஷ், ஆ. விமல்ராஜ், ஜி.சுரேஷ் ராஜா, பூ.சூரியா, கே.கார்த்திகேயன், வி.சீனிவாசன், எஸ்.கார்த்திகேயன், எஸ். மதன்ராஜ், டி.சதீஷ், ஆ. லோகேஷ், எஸ்.மாதவன், கு.ப.ஆதித்யா முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் த.துரைசாமி, அ.தமிழ் மாறன், படப்பை ஆ. மனோகரன், கோல்டு டி. பிரகாஷ், மா.கணேஷ்பாபு, ப.இராமமூர்த்தி, மாலதி போஸ்கோ, சாந்தி சதீஷ்குமார், இந்திராணி சுப்பிரமணி, ஜா.செந்தில் தேவ ராஜ், கு.ப.முருகன், எல். டி.ஜார்ஜ், பி.ரவி, இரா.பிரகாசம், நா.சத்யா, ஏ.முரளிதரன், க.முருகன், ச.தேவேந்திரபாபு, ஏ.டோம்னிக், பா.முத்துகுமாரசாமி, ஏ.அரிகிருஷ்ணன், கா.முனிரத்தினம், டாக்டர் ஓவியா முருகன் உள்பட வடக்கு, தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூர் வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

சூ.டான்போஸ்கோ, கு.செல்வகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் கலந்துகொள்ளும்படி வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ். டி.கருணாநிதி, தெற்கு ஒன்றியச் செயலாளர் ந. கோபால், பேரூர் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை! படப்பை ஆ.மனோகரன் - வே.உமாகாந்த் பங்கேற்பு!

# மாங்காடு நகர இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், டிச. 16-

மாங்காடு நகர வார்டு கழகஇளைஞர்அணிநிர்வாகிகள் பூத்அளவில் நியமிக்கப்பட்ட இளைஞர்அணி, தகவல்தொழில்நுட்பஅணி மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்கலந்தாலோசனைக்கூட்டம் இன்று (16 .12.2023 - சனிக்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் மாங்காடு கூட்ரோடு, ஆர். கே.ராமச்சந்திரா திருமண மண்டபத்தில் நகர கழகச் செயலாளர்பட்டூர்எஸ்.ஜபருல்லா தலைமையில் எம். ஆர்.சீனிவாசன்,ஜி.ராமுவரவேற்புரையில் எம்.எஸ். மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ்எம்.சி.,சுசீலாஇராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், எம்.வீரராகவன், என்.ஜியாவுதீன்சேரன்கதிர்எஸ்.ஜீவா என்.ரமேஷ்முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர்டி.ஆர்.பாலு, மாவட்டச் செயலாளர் - அமைச்சர்தா.மோ.அன்பரசன், படப்பை ஆ.மனோகரன, வே.உமாகாந்த், கோல்டுடி.பிரகாஷ்,முனைவர் எல்.பிரபு ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் ஆர்.பாஸ்கரன், ஏ.கே.அப்துல்ரஹ்மான், எம்.ஆர். வெங்கடேசன்,எம்.எஸ்.கதிரவன், டி. பெருமாள்ராஜ் எம்.சி. மருத்துவர். க.ராஜேஷ், ஜி.ஞானவேல், எஸ்.எஸ்.எஸ்.செல்வராஜ் சரளாவிஜயகுமார் எம்.சி., எஸ்.நளினி, சாந்திசம்பத், ராம்பியாரிலட்சுமணன்,சரிதாஞானவேல், கா.மு.இஸ்மாயில், சி.தனசேகர், மேனகாகணபதி, அனுசுயா சத்தியசீலன், சரஸ்வதிசீனிவாசன், மோசினாஅபிபுர் ரஹ்மான் யாஸ்மின்ஜபருல்லா,

எஸ்.துரை, எம்.சம்பத், ஆர்.எம்.விஜயகுமார், பி. அவினாஷ் ஜெ.கனகராஜ் ஜி.செல்வம், வி.பிரகாஷ், எம்.பிரபு, ஜி.மகாலிங்கம், எஸ்.ராஜசேகர், எஸ்.ஸ்ரீதேவிசத்யா, பி.முருகையன், கா.மு.இஸ்மாயில், டி. கணேஷ், ஜி.ராஜசேகர் எம். சரவணன், என்.சுந்தரமூர்த்தி, எம்.எம்.கணபதி, ஆர்.தனசேகர், டி.ராஜேஷ், பி.வெங்கடேசன்,எம்.தியாகராஜன், எம்.ஜே.ரகு, எம். எஸ்.ரகு, பி.இஸ்மாயில், எம்.கே.பாரூக், வி.புருஷோத்தமன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எம்.வல்லரசு, ஏ.ராஜு, பி.கௌதம், எஸ்.அக்ரம், ஒய்.நவீன், ஆர்.கலையரசன் நன்றி கூறுகின்றனர்.

டிசம்பர்17 சேலத்தில் இளைஞர்அணி மாநில மாநாடு,பூத்வாரியாகவழங்கப்பட்டுள்ள வாக்காளர்களின் குடும்பவிவர படிவங்கள் மற்றும் வீடுவாரியாக கணக்கெடுப்பு பூர்த்தி செய்வதுதொடர்பாகஆலோசிக்கப்படும். இக்கூட்டத்தில் நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள்எனஅனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்துத்தருமாறுநகரஇளைஞர் அணி அமைப்பாளர் ஆர். சாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.

### கோ.சத்தியமூர்த்தி தலைமை! படப்பை ஆ.மனோகரன் - வே.உமாகாந்த் பங்கேற்பு!

# குன்றத்தூர் நகர இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், டிச. 16-

சேலத்தில் நடைபெறும் இளைஞர்அணி2வதுமாநில மாநாட்டையொட்டி குன்றத்தூர் நகர தி.மு.க இளைஞர்அணிவார்டுகழகஇளைஞர்அணிநிர்வாகிகள்BLA2, பூத்இளைஞர்அணிஉறுப்பினர்கள்பூத் தகவல் தொழில்நுட்ப அணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (16.12.2023 - சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில், அறிஞர் அண்ணா அரங்கம், குன்றத்தூரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு கோ. சத்தியமூர்த்திதலைமைதாங்குகிறார். ஆர்.கே. டில்லிபாபு, ஏ.ராஜேஷ்குமார்எம்.அரிகிருஷ்ணன் வரவேற்கின்றனர்.

ஏ.கோதண்டம், டி.கே. குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், எம்.சங்கர், அ. தமிழ்மாறன்,டி.திருநாவுக்கரசுஎம்.சி., கே.கே.இராசமாணிக்கம், என்.குணசேகர் க.வே.சிதம்பரம், ஜெ.மணிமாறன், ஆர்.கே.அபிபுன்னிசா, என்.கருணநிதி த.கந்தசாமி,டி.என்.அருள்மொழி எம்.சி., Dr.ஜி.பாபு, டி.எம். உமாசங்கர்,ப.தீனதயாளன், டி.வி.சரவணன், கே.எஸ். ராஜி,எம்.குப்புசாமிஎம்.சி., ஜெ.முனுசாமி, ஆர்.கே. சையத்யூசப்,டாக்டர்.டி.பி. செந்தில்குமார், எஸ்.கதிரவன்இரா.வேலாயுதம்,ஆர். நரேஷ்குமார்,ஆர்.கே.செல்வமணி,ஆர்.கோபிநாத்,திலகவதி ரவிசந்திரன், வி.தாட்சாயணி, ரா.சரளா ஏ. செஹாரா, டி.விமலா ஆகியோர்முன்னிலைவகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில்காஞ்சிபுரம்வடக்குமாவட்டதி.மு.க செயலாளர், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், படப்பை ஆ.மனோகரன், வே.உமாகாந்த் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

எஸ்.மோகன் நன்றி கூறுகிறார்.

டிசம்பர் 17 சேலத்தில் இளைஞர் அணி மாநில மாநாடு,

பூத்வாரியாக வழங்கப்பட்டுள்ளவாக்காளர்களின் குடும்ப விவர படிவங்கள் மற்றும் வீடுவாரியாக கணக்கெடுப்பு பூர்த்தி செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்படும் இக்கூட்டத்தில் கழக முன்னோடிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின்துணைஅமைப்பாளர்கள், குன்றத்தூர் நகர கழக நிர்வாகிகள், நகர செயற்குழு உறுப்பினர்கள், வார்டு கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின்நகரஅமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள்அனைவரும்கூட்டத்திற்குதவறாமல் கலந்துகொள்ளுமாறு நகரச் செயலாளர் கோ. சத்தியமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.



மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி 7வது வட்டம் ராதாகிருஷ்ணன் நகர், ஒத்தவாடை தெரு, கங்கை அம்மன் நகரில், வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, கே.பி.சொக்கலிங்கம் 7வது வட்டக் கழக செயலாளர் தா.கார்த்திகேயன், எஸ். மகேந்திரன், எம்.கார்த்திக், கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி, உசிலைவேந்தன், ஜெ.ஆர்.டி.சேகர் தொ.மு.ச.தேசிங்கு, எம்.தயாநிதி,எஸ்.விஜயராகவன், பா.கஜா, மேற்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி கே.புனிதா, சி.சந்திரலேகா பி.ஹேமலதா, இரா.கணேசன், அ.ஆனந்தன், மூ.ராம் குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள்கள் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் தொகுதி, 99 (அ) வட்டத்தில்

# 1,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.16-

எழும்பூர் தொகுதி, 99 (அ) வட்டம், சாஸ்திரி நகரைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், பன்னிரெண்டாவது நாளாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 99 (அ) வட்டம், சாஸ்திரி நகரைச் சேர்ந்த 1,000 குடும்பத்தினருக்கு, கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பு சமுதாய நலக்கூடத்தில் நடந்த நிகழ்வில் 1,000 பெட்ஷீட், 1,000 லுங்கி, தலா 5 கிலோ கொண்ட 1,000 அரிசிப்பை மற்றும் 2,000 கெல்லாக்ஸ் பாக்கெட்டுகள் ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார் முன்னிலை வகித்தார்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ. விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர். புருஷோத்தமன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜய போஸ், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன், அவைத் தலைவர் வெ.மருதன், எழும்பூர் சி.ரமேஷ், 108வது வட்டத் துணை செயலாளர் எம். சீனிவாசன், விஜய தேவராஜ், ஏ.கவிதா, ஒய்.இருதயராஜ், டி.பாண்டி யன், எஸ். சத்தியநாதன், பி. கோவிந்தன், ஜி.மாரி, பி. சேகர், பி.ஏழுமலை, டைலர் வெங்கடேசன், உலகநாதன் மற்றும் 99 (அ) வட்டச் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

### அத்தியாவசியப் பண்டங்கள் முறைகேடாக விற்பனை!

# 894 பேர் கைது! 140 வாகனங்கள் பறிமுதல்!

## உணவுப் பொருள் வழங்கல் துறை அறிவிப்பு!

சென்னை, டிச.16

அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டம் / சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது.

அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடுவோர் / உடந்தையாக செயல்படுவோர் மீது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்1955 மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.


மேலும், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம், 1980ன் படி அவ்வப்போது தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 01.11.2023 முதல் 30.11.2023 வரையிலான ஒரு மாத காலத்தில் கள்ளச் சந்தையில் விற்பதற்காக கடத்த முயன்ற, ரூ23,06,197/ (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து ஆறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்) மதிப்புள்ள 3415 குவிண்டால் பொது விநியோ கத்திட்ட அரிசி, 515 எரிவாயு உருளைகள், 100கிலோ கோதுமை, 208 கிலோ துவரம்பருப்பு, 1345 லிட்டர் மண்ணெண்ணெய், 136 பாக்கெட் பாமாயில், ராகி 100 கிலோ ஆகியவையும், மேற்கண்ட கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 140 வாகனங்களும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன.

குற்றச்செயலில் ஈடுபட்ட 894 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980ன் கீழ் 11 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக பொது மக்கள் 1800 599 5950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் கண்டவாரி கண்டிகை கிராமத்தில் உள்ள இஸ்லாமியர் மயானத்திற்கு புதிய சுற்றுச்சுவர் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர வேண்டி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏவிடம் மனு அளித்தனர். உடனடியாக தனது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கினார்.




தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலையினை உயர்த்தி வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தின் தலைவர் ஆர். ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் ரத்னகுமார், எம்.ஜி. ராஜேந்திரன், இராமசாமி, எஸ்.ஏ ராசு, ஹரிஹரன், கோவிந்தராஜ் பாண்டியன், பழனியப்பன், குண்டு, பிரபாகரன், ராஜேந்திரன், உக்கிரபாண்டி ஆகியோர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஆவின் மேலாண்மை இயக்குநர் எஸ். வினித், ஆகியோர் உள்ளனர்.

### வெடிவிபத்தில் உயிரிழந்த - விருதுநகர் மாவட்டம்

# வெம்பக்கோட்டை சண்முகராஜ் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 16- விருதுநகர் மாவட்டம், பனையடிபட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது அறிக்கை வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையடிபட்டி கிராமத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (15.12.2023) காலை எதிர்பாரா தவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம்,

பனையடிப்பட்டி கிராமம், கண்டியாபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜ் (வயது 36) த/பெ. பொம்மு ரெட்டியார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழுந்தவரின் குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்ற பாதுகாப்புக் குறைபாடு:

# ஒன்றிய அரசு அறிக்கை அளிக்கும் வரை போராட்டம் தொடரும்!

## எதிர்க்கட்சியினர் முழக்கம் - இரு அவைகளும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, டிச. 16 -

நாடாளுமன்ற பாதுகாப்பு குறைபாடு குறித்து பிரதமர் விளக்கம் தர வேண்டும் என்றும் அத்துமீறியவர்களுக்கு பாஸ் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது நடவடிக்கை தேவை என்றும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை மறுத்து இரு அவைகளும் ஒத்திவைக்கப் பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப் பட்டதை ரத்து செய்ய வலியுறுத்தி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை முதலில் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய குறைபாடு குறித்து விவாதிக்க வலியுறுத்திய எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் 14 பேர் நேற்று சஸ்பெண்ட் செய்யப் பட்டனர். இதைத் தொடர்ந்து, நேற்று மக்களவை கூடிய வுடன், சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்யக்கோரி எதிர்க்கட்சிகளின் இதர உறுப்பினர்கள் முழக்க மிட்டனர். பாதுகாப்பு குளறுபடி குறித்து பிரதமர் அவைக்கு வந்து விளக்கமளிக்க வும் வலியுறுத்தினர். மேலும், இதுதொடர்பாக விவாதிக்க திமுக, காங்கிரஸ் உள்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 23 நோட்டீஸ்களை வழங்கினர். இதற்கு அனுமதி மறுத்த சபாநாயகர், அவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைப்பதாக தெரிவித்தார்.

இதே விவகாரம் மாநிலங்களையிலும் எதிரொலித்தது. கூட்டம் தொடங்கிய உடனே சஸ்பெண்ட் நடவடிக்கையை கண்டித்து முழக்கமிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் அத்துமீறியார்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்கிய பா.ஜ.க. எம்.பி பிரதாப் சிம்ஹா மீது நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினர். ஆனால், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்க்கட்சி எம்.பி.க்களின் தொடர் முழக்கத்தால் மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள் 14 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

நாடாளுமன்றத்தில் அத்துமீறி இருவர் புகுந்து புகை குண்டுகளை வீசிய விவகாரத்தில் உள்ள பாதுகாப்பு குறைபாட்டை கண்டித்தும், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா விளக்கமளிக்க கோரியும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினர். ஆனால், இதுகுறித்து விளக்கமளிக்க ஒன்றிய அரசு மறுத்தது. மாறாக எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள் 14 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். சஸ்பெண்ட் நடவடிக்கையை கண்டித்து, எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பாக தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய குளறுபடி குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும், தவறு எங்கு நடந்தது என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும், நாட்டின் ஜனநாயகம் அச்சுறுத்தலில் உள்ளாகி இருப்பதாகவும் பதாகைகளை ஏந்தியவாறு எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

**கனிமொழி கருணாநிதி**

மக்களவை தி.மு.க. குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி அப்போது கூறியதாவது:-

எங்களால் மட்டுமே, நாட்டை பாதுகாக்க முடியும் என்று பா.ஜ.க.வினர் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஆனால், நாடாளுமன்றத்தைக்கூட அவர்களால் பாதுகாக்க முடிய வில்லை.

நாட்டில் என்ன நடந்தாலும் அதற்கு ஒன்றிய அரசு தான் பொறுப்பு நாட்டின் பாதுகாப்பில் குளறுபடி ஏற்பட்டால், அதற்கு ஒன்றிய அரசே பொறுப்பு பிரதமர் மோடியோ, உள்துறை அமைச்சரோ விளக்க மளிக்கதான் நாங்கள் கோருகிறோம்.

நாடாளுமன்றத்தில் முழக்கங் களை எழுப்பினாலே பெரும் குற்றமாக கருதி சஸ்பெண்ட் செய்கிறார்கள். நாடாளுமன்றத்திற்கு செல்ல முடியாததால் வெளியே நின்று போராடுகிறோம்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அறிக்கை அளிக்கும் வரை இந்த பிரச்சினையை தொடர்ந்து எழுப்புவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

**திருச்சி சிவா**

நாடாளுமன்ற தாக்குதல் சம்பவம் குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் பதிலளிக்கும் வரை தங்களது போராட்டம் தொடரும் என்று மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த திருச்சி சிவா, நாடாளுமன்றத்தையே பாதுகாக்க முடியாதவர்கள், நாட்டு மக்களை எப்படி பாதுகாப்பார்கள்? என்று கேள்வி எழுப்பினார். நாடாளுமன்றத்தையும், எதிர்க்கட்சிகளையும் ஒன்றிய அரசு மதிப்பதில்லை என்றும், நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை இல்லாத சூழலை உருவாக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். தாக்குதல் நடத்தியவர்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்றும் திருச்சி சிவா கேள்வி எழுப்பினார்.

பேச்சுரிமையை தடுக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி நாடாளுமன்ற தாக்குதல் சம்பவம் குறித்து உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்கும்வரை எங்களது போராட்டம் ஓயாது நாடாளுமன்றத்தையே பாதுகாக்க முடியாதவர்கள், நாட்டு மக்களை எப்படி பாதுகாப்பார்கள்?

நாடாளுமன்றத்தையும், எதிர்க்கட்சிகளையும் ஒன்றிய அரசு மதிப்பதில்லை. நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை இல்லாத சூழலை உருவாக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிக்கிறது. தாக்குதல் நடத்தியவர்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்று திருச்சி சிவா பேட்டியளித்தார்.

# மோடி ஆட்சியில் இதுவரை 177 எம்.பி.க்கள் சஸ்பெண்ட்!

## ஒன்றிய அரசுக்கு எதிராக குரல் எழுப்பியதால் நடவடிக்கை!

புதுடெல்லி, டிச. 16-

மோடி ஆட்சிக்கு வந்த பிறகு மூன்று மடங்கு அதிகமாக 177 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடர் கடந்த 4ம் தேதி தொடங்கியது. வரும் 22ம் தேதிவரை இக்கூட்டத் தொடர் நடைபெற உள்ளது. இந்நிலையில், மக்களவை நேற்று முன்தினம் நடைபெறும்போது, பார்வையாளர் அரங்கில் இருந்த 2 பேர் திடீரென கலர் புகை குண்டுளை வீசி தாக்குதல் நடத்தினர். இது போன்று நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு பெண் உள்ளிட்ட இருவர் கலர் புகை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில் இதுவரை 5 பேரை டெல்லி போலீசார் கைது செய்துள்ளனர்.

மக்களவை நேற்று காலை கூடியதும், ‘முந்தைய நாள் சம்பவம் குறித்து பிரதமர் அல்லது உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும். 2 பேருக்கு பாஸ் வழங்கிய பாஜக எம்.பி. மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தி முழக்க மிட்டனர். அவையின் மையப் பகுதிக்கு வந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஒத்திவைத்தார். அவை மீண்டும் கூடியதும், ஒன்றிய அரசு சார்பில் ஓர் அறிக்கையை அமைச்சர் பிரகலாத் ஜோஷி வாசித்தார். நாடாளுமன்றத்தின் உட்புற பாதுகாப்பு, சபாநாயகரின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, 5 எம்.பி.க்களை இடைநீக்கம் செய்யும் தீர்மானத்தை அவர் கொண்டுவந்தார். இந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம்நிறைவேறியது. இதன்படி, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த டிஎன்.பிரதாபன், ஹிபி ஈடன், டீன் குரியகோஸ், ரம்யா ஹரிதாஸ், எஸ்.ஜோதிமணி ஆகிய 5 எம்.பி.க்கள் கூட்டத்தொடர் முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

அவை மீண்டும் கூடியதும், அமைச்சர் ஜோஷி மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்தார். இதன்மூலம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வி.கே.கண்டன், பென்னி பெஹனன், முகமது ஜாவேத், மாணிக்கம் தாகூர் ஆகிய 4 எம்.பி.க்கள், திமுகவை சேர்ந்த கனிமொழி, எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகிய 2 பேர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த பி.ஆர்.நடராஜன், கே.சுப்பராயன் ஆகிய இருவர், மார்க்சிஸ்ட் கட்சியின் சு.வெங்கடேசன் என 9 எம்.பி.க்கள்கூட்டத்தொடர் முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்டனர். ஆனால் திமுக எம்.பி. எஸ்.ஆர். பார்த்திபன் பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டதாக கூறி, அவரது பெயரை சஸ்பெண்ட் எம்.பி.க்கள் பட்டியலில் இருந்து மக்களவை செயலகம் அறிவித்தது. நேற்று மட்டும் ஒரே நாளில் 14 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். கடந்த 2014ல் மோடி ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரை 177 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா மக்களவையில் இருந்து வெளியேற்றப்பட்டார். அதே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சி காலத்தில் (முதல், இரண்டாவது) 53 எம்.பி.க்கள் மட்டுமே இடைநீக்கம் செய்யப்பட்டனர். மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில், எம்.பி.க்களின் சஸ்பெண்ட் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. மோடி அரசின் எதேச்சதிகாரப் போக்கு, சஸ்பெண்ட் நடவடிக்கையிலும் பிரதிபலிக்கிறது என்று எதிர்கட்சி எம்.பி.க்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

மோடி முதல் ஐந்தாண்டு கால ஆட்சியில் 104 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இரண்டாவது ஆட்சி காலத்தில் இதுவரை 73 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த 2020 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது 7 மக்களவை எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். மா.கம்யூ ராஜ்யசபா தலைவர் எளமரம் கரீம், கே.கே. ராகேஷ் உட்பட 8 ராஜ்ய சபா எம்.பி.க்கள் ஆண்டு கூட்டத்தொடரின் போது இடைநீக்கம் செய்யப்பட்டனர். 2021 குளிர்கால கூட்டத்தொடரின் போது விவசாய சட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்தியதற்காக எளமரம் கரீம், பினோய் விஷ்வா உட்பட 12 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

2022 ஆண்டு கூட்டத்தொடரின் போது ஏ.ஏ.ரஹீம், வி.சிவதாஸ், பி.சந்தோஷ் குமார் உள்ளிட்ட 20 ராஜ்ய சபா எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அதே அமர்வில் நான்கு மக்களவை எம்.பி.க்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெரும்பாலான எம்.பி.க்கள் மீதான நடவடிக்கையானது, ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக அவையில் கோஷங்கள் எழுப்பியதற்காகவே, அவர்கள் மீது சஸ்பெண்ட் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### கொடநாடு கொலை - கொள்ளை வழக்கு:

# எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராக வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, டிச. 16 -

கொடநாடு கொலை கொள்ளை வழக்கில், சாட்சியங்களை பதிவு செய்வதற்காக மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு அறிவுறுத்தல் வழங்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடநாடு கொலை கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியை சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு தற்போது அ.தி.மு.க. பொது செயலாளராக உள்ள எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிம ன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது எனவும், தமது வீட்டில் சாட்சியத்தை பதிவுசெய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமெனவும் கோரி எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிம ன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை ஏற்ற உயர் நீதிமன்றம், நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்தோடு, இந்த நடைமுறையை அவரது வீட்டில் மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையராக எஸ். கார்த்திகை பாலனை நியமித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து சாமுவேல் மேத்யூ சாமுவேல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு வழக்கு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அப்போது, மாஸ்டர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி ஆஜராவதில் இருந்து விலக்களிக்க வேண்டும் என கூறக்கூடிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என தெரிவித்த நீதிபதிகள், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என ஏற்கனவே கூறியதை மீண்டும் நினைவு ப்படுத்துவதாக கூறினர்.

மேலும், சென்னை உயர் நீதிமன்றம் சிறப்பான பாதுகாப்புகளை வழங்கி வருவதால், எடப்பாடி பழனிசாமி மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தல் வழங்க அவர் தரப்பு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜனவரி 5ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.



ஆவடி அருகே திருநின்றவூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஏஜி மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் திறந்து வைத்து மருத்துவமனையை பார்வையிட்டார். அருகில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயக்குமார், சுகாதார இணை இயக்குனர் செந்தில் குமார், மருத்துவமனை நிர்வாக இயக்குநர்கள் ஆர். ராஜசுந்தரேஸ்வரி, பி.ரகுநாதன், ஜெயா கல்லூரி சேர்மன் கனகராஜ், மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ. ரமேஷ், ம.இராஜி, பா.நரேஷ்குமார், விமல்வர்ஷன், பகுதிச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், துணை அமைப்பாளர் ஆர்.செந்தாமரை, மாவட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பொறியாளர் எம்.மோகன், எம்.கிருஷ்ணன், நாகராஜ், பி.எல்.ஆர்.யோகா, தங்கராஜ், சந்தோஷ் குமார், என்.லட்சுமி, ஹரிபாபு, உள்பட மருத்துவர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பெரம்பூர், ஜமாலியா, வார்டு-74, மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கினார். இந்நிகழ்வின் போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம்கவி, உள்ளாட்சிப் பிரதிநிதிகளை சேர்ந்த ராஜன், தமிழ்வேந்தன், சாமிகண்ணு, தினார் ஆறுமுகம், புஷ்பராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், நேற்று (15.12.2023) இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) சார்பாக 4.12.2023 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கிய 2023க்கான 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' என்ற விருதினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வழங்கி வாழ்த்துப் பெற்றார்கள்.

### சேலம் மாடர்ன் தியேட்டர் இடத்தைக் கேட்டு

# அரசுத் தரப்பில் நிர்பந்திப்பதாக வந்த தகவல்கள் தவறானவை!

## அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, டிச.16

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்திருப்பதாவது:-

சேலத்தில் முன்பு செயல்பட்டு வந்த மாடர்ன் தியேட்டர்ஸின் நுழைவாயிலில் சிலை அமைப்பதற்காக, அந்த இடத்தை கேட்டு, அரசின் சார்பில் நிர்ப்பந்திக்கப்படுவதாக பத்திரிக்கையில் செய்திகள் வந்துள்ளன.

இந்த நிறுவனம் செயல்பட்டு வந்த 8.9 ஏக்கர் நிலமானது, தற்போது, மனைகளாகவும், வணிகப் பகுதியாகவும் மாற்றப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதியின் நுழைவாயில் வளைவு சேலம் ஏற்காடு நெடுஞ்சாலையில் கன்னங்குறிச்சி கிராமத்தின் சர்வே எண்.8-இல் உள்ளது.

இந்த சாலையை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால், நெடுஞ்சாலைத்துறை நிலங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக, வருவாய்த் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களால், 2.12.2023 அன்று, அளவீடு நடத்தப்பட்டுள்ளது. இந்த அளவீட்டின் போது, மாடர்ன் தியேட்டர்ஸ் நுழைவாயில் வளைவு முழுமையாக, நெடுஞ்சாலைத்துறை நிலத்தில் இருப்பது கண்டறியப்பட்டது.

அரசின் நிலவரை படத்தில் உள்ளவாறு, எல்லைகளை வரையறுப்பதற்காக, நெடுஞ்சாலையினுடைய எல்லையில் எந்த சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு, எல்லை கற்கள் நடப்பட்டுள்ளன.



மாடர்ன் தியேட்டர்ஸ் நுழைவாயில் வளைவு, தற்போது நெடுஞ்சாலைத்துறையின் நிலத்திலேயே முழுமையாக அமைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ள நிலையில், பழமையான இந்த நுழைவாயில் வளைவைப் பாதுகாத்து, பராமரிப்பது மட்டுமே அரசின் நோக்கம் என்ற அடிப்படையில், இந்தப் பகுதியில், வேறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கோ, சிலைகளை நிறுவுவதற்கோ அரசிடம் எந்த ஒரு திட்டமும் இல்லை. எனவே, இந்த நெடுஞ்சாலைத்துறை இடம் தவிர, வேறு இடத்தைக் கேட்டு அரசுத் தரப்பில் நிர்ப்பந்திப்பதாக வெளிவரக்கூடிய தகவல்கள் அனைத்தும் தவறானவை என தெளிவுபடுத்தப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.











முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்அவர்களின் கோரிக்கையை ஏற்று, நெய்வேலி என்.எல்.சி. நிர்வாகத்தின், ராட்சத இயந்திரங்கள் மூலம் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வளசரவாக்கம், வேளச்சேரி, ஆவடி மாநகராட்சி, திருவேற்காடு நகராட்சிப் பகுதிகளில் தேங்கி நின்ற மழைநீரை முழுவதுமாக அப்புறப்படுத்தி நெய்வேலி திரும்பிய என்.எல்.சி. நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள்அடங்கியகுழுவினர் பாக்கியநாதன், பொ.புகழேந்தி, சந்திரசேகர், அறிவழகன், வாசுதேவன், சிவகுமார் ,நெடுஞ்செழியன், செந்தமிழ் செல்வன், மணி ஆகியோர் அடங்கிய 56 பேரை நெய்வேலி என்.எல்.சி நிறுவன அதிபர் மற்றும் நிர்வாக இயக்குனர் மோட்டுப்பள்ளி ஸ்ரீபிரசன்ன குமார் சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்துவரவேற்றார். உடன் மனிதவள இயக்குநர் சமீர் ஸ்வரூப் , திட்டமிடல் மற்றும் செயலாக்க இயக்குனர் மோகன் ரெட்டி, மின்துறை இயக்குனர் வெங்கடாசலம், சுரங்கத்துறை செயல் இயக்குனர்கள் ஜாஸ்பர்ரோஸ், ராஜசேகர் ரெட்டி மற்றும் NLC உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

### நாடாளுமன்றத்திற்குள் நுழைய அனுமதிச்சீட்டு வழங்கிய பா.ஜ.க. எம்.பி. விசாரிக்கப்படவில்லை!

# எம்.பி.க்கள் இடைநீக்கம் ஜனநாயக விரோதச் செயல்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

சென்னை, டிச.16

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தது முதற் கொண்டு கடந்த ஒன்பதரை ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மீதோ, நாடாளுமன்றஜனநாயகத்தின்மீதோ நம்பிக்கையில்லாத வகையில் செயல்பட்டு வருவதை எதிர்த்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாகப் போராடி வருகிறார்கள். ஆனால், மக்களவையில் மிருகபல மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு தங்களது நோக்கங்களை ஜனநாயகத்திற்கு விரோதமாக நிறைவேற்றி வருகிறார்கள். குறிப்பாக ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய சிறுபான்மையின மக்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டு வருகிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத பிரதமர் மோடி, விவாதத்தில் பங்கெடுப்பதில்லை. பாராளுமன்றத்திற்கு பொறுப்புடைமை இல்லாதவராகவும், கருத்து மோதலில் ஈடுபடுவதில் விருப்பம் இல்லாதவராகவும் செயல்பட்டு வருகிறார். கடந்த 13 ஆம் தேதி மக்களவையில் நடைபெற்ற சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

**நாடாளுமன்றத் தாக்குதல் திட்டமிட்ட சதி!**

புதிய நாடாளுமன்றத்தில் பலத்த பாதுகாப்பை மீறி கலர் குண்டு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே மிகப்பெரிய திட்டமிட்ட சதி நடந்திருக்கிறது. கடந்த சில மாத காலமாக முகநூலில் இவர்கள் கருத்து பரிமாற்றம் செய்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியினரின் கருத்து சுதந்திரத்தைப் பறிப்பதில் அக்கறையுள்ள பா.ஜ.க. சட்டவிரோதமாகச் செயல்பட்ட இத்தகைய குழுக்கள் மீது கண்காணிப்பு இல்லாமல் போனது அப்பட்டமான அலட்சியப் போக்காகும். புதிய நாடாளுமன்றத்தின் வடிவமைப்பே பயங்கரவாத, தீவிரவாத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அனுகூலமாக அமைந்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. மக்களவையில் உள்ள இருக்கைகளுக்கு மேலே 10 அடி



உயரத்தில் பார்வையாளர்கள் அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தான் கலர் குண்டு தாங்கியவர் மக்களவைக்கு உள்ளே எகிறிக் குதித்து அமளியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார். ஒட்டுமொத்தமாகப் பார்க்கிற போது, அப்பட்டமான பாதுகாப்பு குளறுபடி அம்பலமாகியிருக்கிறது. கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்பு இதே பா.ஜ.க. ஆட்சியில் பாராளுமன்றம் தாக்குதலுக்கு இரையாகி 9 பேர் பலியான துயரச் சம்பவம் நடந்த அதே நாளில் மீண்டும் இத்தகைய கொடிய சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இது மோடி ஆட்சியின் மீது படிந்த அழிக்க முடியாத கறையாகும்.

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத பிரதமர் மோடியும், அமித்ஷாவும் சம்பவம் நடந்த போதும், சம்பவம் நடந்த மறுநாளும் அவைக்கு வராமல் அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டுள்ளனர். ஆனால், தலைவர் ராகுல் காந்தி இந்த சம்பவத்தின் போது அவையில் இருந்திருக்கிறார். இந்தியாவின் எதிர்க்கட்சி தலைவராக இருக்கிற அவரைப் போன்ற மக்களவை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய ஒன்றிய அரசு அதில் முற்றிலும் தோல்வியடைந்து விட்டதையே இந்த சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

**மோடி – அமித்ஷா பதில் தர வேண்டும்!**

இச்சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும், இதன் பின்னணி குறித்தும், இதில் பயங்கரவாத குழுக்களின் தொடர்பு இருக்கிறதா ? என்பது குறித்தும் விசாரிக்க வேண்டும். பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இதற்கான விளக்கத்தை நாடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்று கோரி குரல் எழுப்பிய மக்களவை உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், கனிமொழி, சுப்பராயன், ஜோதிமணி உள்ளிட்டவர்கள் எஞ்சியிருக்கிற நாடாளுமன்ற கூட்டத் தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். சஸ்பெண்ட் செய்யப்பட்ட 14 பேரில் 6 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மீது நடவடிக்கை எடுத்த சபாநாயகர் கலர் குண்டு தாக்குதலில் ஈடுபட்டவருக்கு மக்களவைக்கு உள்ளே நுழைய அனுமதிச் சீட்டு வழங்கிய மைசூர் பா.ஜ.க. எம்.பி., பிரதாப் சின்கா மீது இதுவரை எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. அவர்மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அனுமதிச் சீட்டு வழங்கியவர் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருந்தால் சபாநாயகரின் நடவடிக்கையும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் அணுகுமுறையும் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இதன்மூலம் பா.ஜ.க.வின் அப்பட்டமான பாரபட்ச நிலையும், பழிவாங்கும் போக்கும் முழுமையாக வெளிப்படுகிறது.

**மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநரிடம் பேசி பயன் என்ன?**

தமிழக ஆளுநர் மாளிகைக்கு வெளியே நடந்த சிறிய அசம்பாவித நிகழ்வுக்கு சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, உடனடியாக தேசிய புலனாய்வு முகமை விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று அறிக்கை வெளியிட்ட பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இதற்கெல்லாம் என்ன பதில் கூறப் போகிறார் என்று தெரியவில்லை. ஆனால், ஆளுநரை முதலமைச்சர் சந்தித்துப் பேச வேண்டுமென்று பரிந்துரை செய்கிறார்கள். அனைத்து மசோதாக்களையும் பரிசீலனை செய்யாமல் ஒட்டுமொத்தமாகக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவிட்டு தமிழக அரசை முடக்குகிற ஆளுநரை தமிழக முதல்வர் சந்திப்பதால் என்ன பயன் ஏற்படப் போகிறது என்பதை ஆளுநரின் ஊதுகுழலாக இருக்கிற அண்ணாமலை தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுவாக இன்றைக்குப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தாக்குதலும், அதையொட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் நடவடிக்கையும் அப்பட்டமான, ஜனநாயக விரோத செயலாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மோடி, ஜனநாயகத்தில் ஒரு சர்வாதிகாரியைப் போலச் செயல்படுவதால் தான் பாராளுமன்றம் இத்தகைய தாக்குதலுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறது. இத்தகைய போக்குகள் இந்தியாவின் ஜனநாயகத்திற்கே கேலிக் கூத்தாகவும், அவமானமாகவும் அமைந்து விட்டது என்பதே ஜனநாயக உணர்வாளர்களின் கருத்தாக உள்ளது. இத்தகைய பேராபத்திலிருந்து இந்தியாவை மீட்பதற்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

# 9 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை,டிச.16-

தமிழ்நாட்டில் உள்ள 9 மாவட்டங்களுக்கு சென்னை வானிலை ஆய்வு மையம் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு திசைக் காற்றில் நிலவும் வேகமாறுபாடு காரணமாக இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 17-ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் தென்காசி, விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளது. இதன் காரணமாக டெல்டா மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை, அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடனும், நகரின் ஒரு சில இடங்களில் லோசான மழை பெய்யக் கூடும்.

மேலும் அதிகப்பட்ச வெப்பநிலையாக 30-31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியசாகவும் இருக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 9 மாவட்டங்களுக்கு கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள் குமரிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய மாலத்தீவு பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40-45 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை கடனுதவியாக வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.12.2023) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம், செங்கல்வராயன் தெருவில் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு அப்பல்லோ மருத்துவமனை மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து 4 நாட்கள் நடத்தும் சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு, அங்கு மருத்துவ சிகிச்சைப் பெற்றவர்களுக்கு பிரட், ரஸ்க், மருந்து மாத்திரைகள் மற்றும் தண்ணீர் பாட்டில்களை வழங்கினார். இந்நிகழ்வின் போது திரு.வி.க. நகர் மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ் குமார், உள்ளாட்சி பிரதிநிதிகளைச் சேர்ந்த நாகராஜன், சந்துரு, மகேஷ்குமார், முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### பழனி – தாராபுரம் இருவழிச் சாலையினை அகலப்படுத்தி

# நான்கு வழிச் சாலையாக மேம்படுத்தும் திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார்!

சென்னை, டிச.16-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, முன்னிலையில் பழனி - தாராபுரம் இருவழிச் சாலையினை அகலப்படுத்தி நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தும் திட்டப்பணிகளை துவக்கி வைத்து, தமிழகத்தில் ரூ.4,324.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, முன்னிலையில் அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர் (நெடுஞ்சாலைத்துறை) பிரதீப் யாதவ், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மோ.நா.பூங்கொடி, தலைமையில் பழனி - தாராபுரம் இருவழிச்சாலையினை அகலப்படுத்தி ரூ.97.30 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தும் திட்டப்பணிகளை நேற்று (15.12.2023) துவக்கி வைத்தார்.

விழாவில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி, செயல்படுத்தி வருகிறார்கள். அதற்காக முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் 2200 கி.மீட்டர் நீளம் சாலை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி 2021-2022-ஆம் ஆண்டில் 255 கி.மீட்டர் நீளம் சாலை ரூ.2124 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கிராமப்பகுதிகளில் 1721 தரைப்பாலங்கள் உள்ளன. இந்த தரைப்பாலங்களை மேம்படுத்த ரூ.2200 கோடி நிதியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி தந்தார். அதன்படி 2021-22-ஆம் ஆண்டில் ரூ.800.00 கோடி மதிப்பீட்டில் 66 தரைப்பாலங்களும், 2022-23-ஆம் ஆண்டில் ரூ.110.00 கோடி மதிப்பீட்டில் 66 தரைப்பாலங்களும், 2023-24-ஆம் ஆண்டில் ரூ.800 கோடி மதிப்பீட்டில் 274 தரைப்பாலங்களும் மேம்பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன. தொடர்ந்து பல்வேறு இடங்களில் தரைப்பாலங்கள் மேம்பாலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டும் இதேபோல் பணிகள் மேற்கொள்ளும்பட்சத்தில் தமிழகத்தில் தரைப்பாலங்களே இல்லாத நிலை உருவாகும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 2021-22-ஆம் ஆண்டில் 212 கி.மீட்டர் நீளம் சாலை ரூ.331 கோடி மதிப்பீட்டிலும், 2023-22-ஆம் ஆண்டில் 301 கி.மீட்டர் நீளம் சாலை ரூ.391 கோடி மதிப்பீட்டிலும், 2023-24-ஆம் ஆண்டில் 164 கி.மீட்டர் நீளம் சாலை ரூ.457 கோடி மதிப்பீட்டிலும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழனி (நெடுஞ்சாலைத் துறை- கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தில் பழனி - தாராபுரம் சாலை 13.40 கி.மீட்டர் நீளத்திற்கு, முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.106.00 கோடி நிதி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெற்று ரூ.97.30 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தும் திட்டப்பணிகள் இன்று (15.12.2023) துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணியில் ரூ.8.61 கோடி மதிப்பீட்டில் 23 சிறு பாலங்கள் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யும் பணிகளும், ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் 550 மீட்டர் நீளத்தில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. இச்சாலையானது ரூ.47.60 கோடி மதிப்பீட்டில் மையத்தடுப்பானுடன் இருபுறமும் 7.50 மீட்டர் அகலத்திற்கு ஓடுதளம் அமைக்கப்பட உள்ளது.

இப்பணி செயல்படுத்தப்படும்பட்சத்தில் பழனி-தாராபுரம் சாலையில் புளியம்பட்டி, தும்மலப்பட்டி, தொப்பம்பட்டி மற்றும் வேலம்பட்டி ஆகிய ஊர் மக்களின் கல்வி, விவசாயம் மற்றும் மருத்துவ உதவிகள் உள்ளிட்ட வாழ்வியல் மேம்பாடு அடைய அதிக வாய்ப்புள்ளது. மேலும், இச்சாலை திண்டுக்கல், திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய சாலையாகும். பின்னலாடை உற்பத்தியில் சிறந்து விளங்கும் தொழில் நகரான திருப்பூரை இணைக்கும் விதத்தில் இந்தச் சாலை அமைந்துள்ளது.

மேலும் இத்திட்டப்பணியில் சாலையின் வலதுபுறம் பழனி ஆண்டவர் கோயிலுக்கு வரும் தைப்பூச திருவிழாவிற்கு வரும் பாதயாத்திரை பக்தர்கள் மற்றும் பங்குனி உத்திர திருவிழாவிற்கு கொடுமுடியிலிருந்து தீர்த்த காவடி எடுத்து வரும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிக்காக 1.50 மீட்டர் அகலத்தில் நடைபாதையானது ரூ.6.87 கோடி மதிப்பீட்டில் பேவர் பிளாக் நடைபாதை (*Paver Block Foot Path*) வசதியும் அமைக்கப்பட உள்ளது. மேலும் புளியம்பட்டி மற்றும் தொப்பம்பட்டி ஆகிய சாலை சந்திப்புகளில் முதலமைச்சரின் ஆணையின் படி விபத்துக்களை முற்றிலுமாக குறைக்கும் வகையில் சாலை சந்திப்புகள் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் சீர் செய்யப்பட உள்ளது. இதில் இச்சாலையில் 15 இடங்களில் சிறு சந்திப்புகளும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்பட உள்ளது. மேலும், இச்சாலையில் 6 இடங்களில் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட உள்ளது. மேலும், புளியம்பட்டி மற்றும் தொப்பம்பட்டி கிராமங்களின் குடியிருப்பு பகுதிகளில் 1200 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் வசதி ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

பழனி (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தில், மாநில நெடுஞ்சாலைகள் 256.865 கி.மீட்டர், மாவட்ட முக்கியச் சாலைகள் 357.718 கி.மீட்டர், மாவட்ட இதரச் சாலைகள் 785.740 கி.மீட்டர், கரும்பு அபிவிருத்தி சாலைகள் 18.740 கி.மீட்டர் என மொத்தம் 1,419.063 கி.மீட்டர் நீளம் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்கோட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021-22-ஆம் ஆண்டில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.87.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 7.670 கி.மீட்டர் நீளமுள்ள ஒட்டன்சத்திரம் நகரப் பகுதி சாலை இரு வழிச் சாலையிலிருந்து பாவு தளத்துடன் கூடிய நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், வடிகால் கட்டுதல் நடைபாதை அமைத்தல் ஆகியவற்றில் 90 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ. 97.44 கோடி மதிப்பீட்டில் 96.790 கி.மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

2022-23-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.175.79 கோடி மதிப்பீட்டில் 163.87 கி.மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தி மேம்பாடு செய்து முடிக்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.106.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பழனி - தாராபுரம் சாலை 13.400 கி.மீட்டர் நீளம் இரு வழிச் சாலையிலிருந்து நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.262.02 கோடி மதிப்பீட்டில் 235.435 கி.மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தி மேம்பாடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

பெண்கள் உயர் கல்வியை உறுதிப்படுத்துவதற்காக 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குடும்பத்தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது, என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்துத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பகுதிகளிலும் சாலைகள் தரமாகவும், நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் லெக்கையன்கோட்டை, பழனி பகுதி சாலைகள் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, பழனி - தாராபுரம் இருவழிச்சாலை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்த சுமார் ரூ.110 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த சாலை அதிகளவிலான பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையாக உள்ளது. மேலும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு அதிகளவிலான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இதனால் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளது. எனவே. இந்த சாலைக்கு முக்கியத்துவம் அளித்து, வாகனப் போக்குவரத்தை சீரமைக்கவும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், பாதுகாப்பான வாகனப் போக்குவரத்தை உறுதிப்படுத்தவும் இந்த சாலை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்படுகிறது, என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திருமதி சத்திய புவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் க.திருமலைச்சாமி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், தலைமைப் பொறியாளர்(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) இரா.சந்திரசேகர், மதுரை கண்காணிப்புப் பொறியாளர்(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) மாரிமுத்து, கோட்டப்பொறியாளர் குமணன், உதவிக் கோட்டப்பொறியாளர் பாபுராமன், உதவிப்பொறியாளர் ஜெயபாலன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் பி.சி.தங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சு.கிருஷ்ணசாமி, தொப்பம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி ஈஸ்வரி ராமராஜ், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் கு.மோகன்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### ஒருங்கிணைந்த மும்பை மாநில தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த

# த.மு.பொற்கோ இல்லத் திருமண வரவேற்பு விழா!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

மும்பை, டிச. 16 -

பாந்த்ராவில் வசிக்கும் மறைந்த மும்பை தி.மு.க. செயலாளர் த.மு.பொற்கோவின் மூத்த மகன் பொ.அன்பழகன் - திருமதி சுகுணா அன்பழகன் ஆகியோரின் புதல்வி அ.அசுவினிக்கும், சென்னையைச் சேர்ந்த தி.ச.ரமேஸ் - திருமதி கீதா ரமேஸ் ஆகியோரின் புதல்வர் பிரசாந்த் பாபுவுக்கும், மும்பை மாட்டுங்கா கிழக்கு பகுதியில் உள்ள பயோனியர் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.



திருமண வரவேற்பு விழா மணமகள் வீட்டார் சார்பில் இன்று (16.12.2023 - சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு கொலாபா பகுதியில் அமைந்துள்ள பாம்பே பிரிசிடென்சி ரேடியோ கிளப்பில் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து 21.12.2023 அன்று மணமகன் வீட்டார் சார்பில் சென்னையில் அண்ணா நகரில் அமைந்துள்ள ஐ.சி.எஃப். திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உட்பட ஏராளமான முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பிக்கின்றனர்.

மும்பை மாநில முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ம.சேசுராசு நன்றி கூறுகிறார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நடுகுத்தகை ஊராட்சி பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட 600 நபர்களுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். அருகில் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ. ரமேஷ், மா.இராஜி, பா.நரேஷ்குமார், விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேஷ், பகுதி செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி.நாராயணபிரசாத், ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, துணை தலைவர் ஆர்.செந்தாமரை, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன், பா.கந்தன், உதயா, கிளை செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், வார்டு உறுப்பினரகள் சாந்தகுமாரி, நவமணி ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.

### ச.பாரதி சரவணன் ஏற்பாட்டில் – புழல் பெ.சரவணன் தலைமையில்

# விளங்காடுபாக்கம் ஊராட்சியில் 5000 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச. 16-

தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மிக்ஜாம் புயலில் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் சட்ட மன்ற தொகுதி, புழல் ஒன்றிய விளங்காடுப்பாக்கம் ஊராட்சியில் பெரிய தெரு, மேட்டுத்தெரு, மல்லி மாநகர், தர்காஸ், சிருங்காவூர், அம்பேத்கர் நகர், அம்பாள் நகர், கண்ணம்பாளையம், ராஜீவ் காந்தி நகர், பள்ளிக் குப்பம், துரைசெட்காலனி, விளங்காடுப்பாக்கம், ஜெயராஜ் நகர், R.K.நகர், ஹவுசிங் போர்டு, நியூ ஸ்டார் சிட்டி, கோமதி அம்மன் நகர் பாப்பம்மாள் நகர், சோனியா அவென்யூ, சாய் நகர், தாய் அப்பார்ட்மெண்ட், பிரியா நகர், போஸ் நகர், லட்சுமி நகர், அண்ணா நகர், ஆகிய பகுதிகளில் 14.12.2023 அன்று 5000 குடும்பங்களுக்கு விளங்காடுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன் ஏற்பாட்டில் புழல் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் புழல் பெ.சரவணன் தலைமையில் சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் 5000 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புழல் ஒன்றிய அவை தலைவர் ர.செல்வமணி, புழல் ஒன்றிய துணை பெருந்தலைவர் சாந்தி பாஸ்கரன், மாவட்ட துணை அமைப்பாளர், தங்கராஜன், காமராஜ், மல்லி ராஜா, வார்டு செயலாளர்கள் பரிமளச்செல்வம், எழிலன், கபிலன், அருண், ராமு, திருநாவுக்கரசு, அப்போஸ், டில்லிபாபு, கோவிந்தராஜ், சதிஷ், நாகராஜ், வெங்கடேசன், அஜித் குமார், ராஜேஷ், சீனிவாசன், சீனு, இளைஞர் அணி தனுஷ் சரவணன், ரோகேஷ், சரவணன், செல்வகுமார், விமல், பிரேம்குமார், வார்டு உறுப்பினர் சத்யசீலன், ரதி சீனிவாசன், நிலவழகி இனியன், அருணாதேவி சீனு, ஆனந்தி நாகராஜன், தர்மி ரவி, மாரி மற்றும் கழக தோழர்கள் நாமதேவன், அசோக், அப்பன் ராஜ், மலர் வேந்தன், வேல்குமார், சிவராம், டி.கலையரசன், பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நகர்மன்ற தலைவர் ஜெ.சண்முகம் தலைமை! ஆணையர் சவுந்தர்ராஜன் முன்னிலை!

# மறைமலைநகரில் துப்புரவு பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்!

## வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செங்கல்பட்டு, டிச.16-

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் நகராட்சியில் மிக்ஜாம் புயலினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தூய்மைப் பணியில் ஈடுபடுவதற்காக தென்காசி, கடையநல்லூர் மற்றும் சங்கரன் கோவில் நகராட்சிகளை சேர்ந்த 58 தூய்மைப் பணியாளர்கள் மறைமலை நகர் நகராட்சிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களது சிறப்பான துப்புரவு பணியினை பாராட்டும் விழா மறைமலைநகர் நகராட்சி கூட்டரங்கில் நகராட்சி ஆணையர் சவுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையிலும் நகர்மன்ற தலைவர் ஜெ.சண்முகம் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் பங்கேற்று பணியாளர்களை பாராட்டி அவர்களுக்கு நற்சான்றிதழ்கள், புத்தாடை, காரம், இனிப்பு, பாதாம், முந்திரி, பிஸ்தா மற்றும் 4 ஆயிரம் ரொக்க தொகையினை வழங்கினார். மேலும் அவர்களை பத்திரமாக சொந்த ஊர்களுக்கு வழியனுப்பி வைத்தனர். மேலும் இந்நிகழ்வில் நகர்மன்ற துணைத் தலைவர் சித்ரா கமலக்கண்ணன் உள்பட கவுன்சிலர்கள் நகராட்சி அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில்

# எண்ணூர் 2வது வார்டில் நிவாரண உதவிகள்!

## மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் எஸ்.சுரேஷ் ஏற்பாட்டில்!

சென்னை, டிச.16-

கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் இளைஞர் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின் படி மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழிகாட்டுதலோடு மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அறிவுறுத்தலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வி.தியாகராஜன் ஒத்துழைப்போடு சென்னையில் புயலின் தாக்கத்தால் இரண்டு நாட்களாக தொடர் கனமழையால் பாதிக்கப்பட்ட எணணூர் 2வது வார்டு மக்களுக்கு பால் பாக்கெட், உணவு ஆகியவற்றை வர்த்தக அணி மாவட்ட துணைத் தலைவர் எஸ்.சுரேஷ் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணைச் செயலாளர் இ.ரமேஷ் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு அத்தியாவசிய பொருட்களை சென்னை வடக்கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பாக மாவட்ட துணை தலைவர் எஸ்.சுரேஷ் ஏற்பாட்டில் வழங்கினர்.




திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் கடம்பத்தூர் ஊராட்சி கசவ நல்லாத்தூர் கிராமத்தில் அங்கன்வாடி மைய புதிய கட்டடத்தை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் திறந்து வைத்தார். பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை பதிய வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட கழக அவைத் தலைவர் க. திராவிட பக்தன், கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. அரி கிருஷ்ணன், கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ், ஒன்றிய குழு தலைவர் சுஜாதா சுதாகர், வட்டார வளர்ச்சி அலுவலர் வரதராஜன்,ஒன்றிய கழக நிர்வாகிகள் வி. ராஜசேகர், கொப்பூர் டி. திலீப் குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் நா. பிரசன்ன குமார், கே.பி. தமிழ்ச்செல்வன், சங்கர்,ஆர். வாசு, பிரகாஷ் ஞான ஒளி, கடம்பத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி ரமேஷ், குழந்தைகள் ஊட்ட சத்து திட்ட அலுவலர் ஜெனிபர், பாண்டியன், கசவநல்லாத்தூர் ஆர் .சேகர், பலராமன், வேதாச்சலம், பகவதிராஜா,உள்ளிட்ட கிளைக் கழக நிர்வாகிகள்,இளைஞர் அணி தோழர்கள், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) எண்ணூர் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) எண்ணூர் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை-எண்ணூரில்

# மழை பாதித்த இடங்களில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## எண்ணெய்ப் படலம் படிந்துள்ள இடத்தையும் பார்வையிட்டார்!

**சென்னை, டிச.16-**

**சென்னை எண்ணூரில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**எண்ணெய் படலம் படிந்துள்ள இடத்தையும் பார்வையிட்டார். மழையால் மீன வர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் கேட்டறிந்தார்.**

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில், மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து பார்வையிட்டு வருவதறிவோம்!

அதன் தொடர்ச்சியாக, எண்ணூரில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

எண்ணூர் பகுதியில் கடலில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவை அகற்றுவதற்காக தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் துறை சார்பில், ஏற்படுத்தப்பட்டுள்ள எண்ணெய் கசிவு மேலாண்மை ஒருங்கிணைப்பு மையத்தையும் பார்வையிட்டார்.

எண்ணெய் படலம் அகற்றப்பட்டதன் விவரங்கள் அடங்கிய புகைப்படத்தையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். தொடர்ந்து, எண்ணூர் முகத்துவார பகுதியையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, நெட்டுக்குப்பம் பகுதியில் வந்து ஆய்வு செய்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து மீனவப் பெண்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், கே.பி.சங்கர், மேயர் பிரியா, மண்டல குழுத் தலைவர் தனியரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### 'மிக்ஜாம்' புயலால் வேளச்சேரியில் விபத்து:

# மரணமடைந்த தொழிலாளர்கள் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகை!

## தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

சென்னை, டிச.16-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர் ஆர்.ஜெயசீலன் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/ மற்றும் எஸ்.நரேஷ் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.16,85,000/க்கானஉத்தரவுகள்வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

மிக்ஜாம் புயலினால் பெய்த கனமழையின் காரணமாக சென்னை32 வேளச்சேரியில் மெசர்ஸ்.இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கட்டுமான பணிக்காக கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற ஒப்பந்ததாரர் நிறுவனம் EarthWork செய்யும் பணி மேற்கொண்டு வந்ததாகவும், இப்பகுதியில் கடந்த 04.12.2023 காலை 7.00 மணியளவில் திடீரென மண்சரிவு ஏற்பட்டதாகவும், இதனால் ஏற்பட்ட பள்ளத்தில் கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற நிறுவனத்தின் உதவி மின் பொறியாளர் ஆர். ஜெயசீலன் மற்றும் கட்டுமானப் பணியை ஒட்டி அமைந்திருந்த கேஸ் பங்கின் EB Roomல் இருந்த கேஸ் பங்க் ஊழியர் எஸ்.நரேஷ் (வயது 21) த/பெ.சங்கர் என்பவர் அந்த கட்டிடத்துடன் பள்ளத்தில் மூழ்கி விட்டனர். பின்னர் மழைநீர் வடிந்த பின் 08.12.2023 அன்று இருவரும் பிணமாக மீட்கப்பட்டனர். தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இவ்விரு தொழிலாளர்களின் பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து சென்னை, தொழிலாளர் இணை ஆணையர்1 அவர்கள் முன்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு 1923 ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் திரு.ஆர்.ஜெயசீலன் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.15,49,625/ம் எஸ்.நரேஷ் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.16,85,000/ம் பெற்று தர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை, வேளச்சேரியில் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர்களுக்கு பணியின்போது ஏற்பட்ட விபத்து மரணத்திற்கான இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/க்கான உத்தரவினை ஆர்.ஜெயசீலனின் மனைவி திருமதி.மஞ்சுவிடமும் இழப்பீட்டுத் தொகை ரூ.16,85,000/க்கான உத்தரவினை எஸ்.நரேஷ் தந்தை கே.சங்கரிடமும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர், பொன்.குமார் அவர்கள் சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி. சி. ஹேமலதா மற்றும் தொழிலாளர் இணை ஆணையர் தே.விமலநாதன் கலந்து கொண்டனர்.



புயல் மழையினால் பாதிக்கப்பட்ட தேனாம்பேட்டை திரு.வி.க. குடியிருப்பு பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்களை தயாநிதிமாறன் எம்.பி. வழங்கினார். அருகில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். நெடுஞ்சாலைத்துறை அரசுச்செயலாளர், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் .கோ.தளபதி ஆகியோர் உடன் உள்ளனர்.

### கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருவொற்றியூர் 7வது வட்டத்தில் 2000 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள்!

## அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர் - மா.மதிவேந்தன் வழங்கினர்!

சென்னை, டிச.16-

மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி 7வது வட்டம் ராதாகிருஷ்ணன் நகர், ஒத்தவாடை தெரு, கங்கை அம்மன் நகரில், வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் மீட்புப் பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் ம.மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார், நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, 5வது வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.பி. சொக்கலிங்கம், 7வது வார்டு வட்டக் கழக செயலாளர் தா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி எஸ். மகேந்திரன், மாவட்ட அயலக அணி துணை செயலாளர் எம்.கார்த்திக், கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி, உசிலைவேந்தன், ஜெ.ஆர். டி.சேகர், தொ.மு.ச. தேசிங்கு, எம்.தயாநிதி,எஸ். விஜயராகவன், பா.கஜா, மேற்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி கே. புனிதா, சி.சந்திரலேகா, பி. ஹேமலதா, இரா.கணேசன், அ.ஆனந்தன், மூ.ராம்குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஆளுநராக இன்றி - தமிழிசை சௌந்தரராஜன்

# பா.ஜ.க. தலைவராகவே செயல்பட்டு வருகிறார்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச.16 -

புதுக்கோட்டை அடுத்த திருவேங்கைவாசல் விளக்கு பகுதியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகை இருக்கக்கூடிய ஒரு தெருவில் நடந்த சம்பவத்திற்கு சட்டம் ஒழுங்கு கெட்டுள்ளது. தேசிய புலனாய்வு விசாரணை தேவை என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது. இந்திய இறையாண்மைக்கு எதிராக எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் முதல் குரல் எழுப்பக் கூடியவர் தமிழ்நாடு முதலமைச்சர். இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையானவர். தேச நலன் காக்கப்படுவதில் தி.மு.க.விற்கு மாறுபட்ட கருத்து கிடையாது.

அன்றைக்கு தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியவர்கள் இன்று எந்த அமைப்பை அழைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இது நாடாளுமன்றத்திற்குள்ளேயே நடந்துள்ளது என்பது கண்டிக்கத்தக்கது என்று சொன்னாலும் கூட மிகுந்த பாதுகாப்பை மீறி நாடாளுமன்றம் தாக்குதல் நடைபெற்ற 21 ஆம் ஆண்டு அனுசரிப்பு தினத்தில் அந்த நாளில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மிக மிக அசிங்கம் என்று தெரிந்தும் பாதுகாப்பு கோளாறு எப்படி ஏற்பட்டது. எப்படி உள்ளே இருவர் சென்று கலர் புகை குண்டை எடுத்து செல்ல அனுமதித்தனர். இதையெல்லாம் விசாரணை அமைப்பு தான் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். உள்ளேயே சதி நடந்ததா வெளியே சதி நடந்ததா யாருக்கு தொடர்புள்ளது இதையெல்லாம் எந்த விசாரணை அமைப்புகள் விசாரிக்கப் போகிறதோ அந்த அமைப்புகள் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். நல்ல தீர்ப்பு நாட்டு மக்களுக்குக் கிடைத்தால் சரி. எப்போதும் ஒரு கட்சியின் எம்.பி. அனுமதி கடிதம் கொடுக்கும் போது தனக்கு நன்றாக அறிமுகமானவர்களுக்கு தான் கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த விவகாரத்தில் எப்படி பா.ஜ.க. எம்பி கொடுத்தார் என்று தெரியவில்லை. நான்கு பேர் ஆறு பேர் என்றெல்லாம் கூறுகிறார்கள் இவர்கள் அனைவரும் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள். அவர்கள் எவ்வாறு ஒன்று கூடினார்கள் என்பது வியக்கத்தக்க ஒன்று. அவர்களுக்கு எவ்வாறு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மைசூர் எம்பி அனுமதி கடிதம் கொடுத்து பரிந்துரை செய்தார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஆளுநராக இருக்கக் கூடிய தமிழிசை சௌந்தர்ராஜன் மட்டும்தான் அதிகப்படியான பேட்டிகளை கொடுத்து வருகிறார். மற்ற




ஆளுநர்கள் இதுபோன்று பேசுவது கிடையாது. தமிழிசை சௌந்தர்ராஜனைப் பொருத்தவரை தமிழ்நாடு பா.ஜ.க. மாநில தலைவராகவே அவர் தற்போது வரை கருதிக் கொண்டு இருக்கிறார் என்றுதான் நினைக்கின்றோம்.

சிறையில் இருக்கக் கூடிய சிறைவாசிகளின் மன உளைச்சலைப் போக்க அவர்களது குடும்பத்தார்கள் குழந்தைகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. மன உளைச்சலில் இருந்து அவர்களை மீட்பதற்காக அவர்கள் குடும்பத்தாருடன் அதிக நேரம் பேசுவதற்கும் வீடியோ கால் மூலம் பேசுவதற்கும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்து மன உளைச்சலை குறைத்து அவர்கள் குடும்பத்துடன் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு தமிழ்நாடு சிறைத்துறை உருவாக்கித் தந்துள்ளது

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி நாகசுந்தரம்
### டிசம்பர் 16 (2003)



**தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – திருச்சி மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் – தென் இந்திய நலவுரிமைச் சங்க உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**திருச்சி நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**தேவிகுளம்–பீர்மேடு; மும்முனை, இந்தி எதிர்ப்பு, விலைவாசி ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது மிசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**"கட்சிக்காக என்ன செய்தேன் என்று கேட்கின்றவர்களுடைய பட்டியலில் உள்ளவர் என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், படாளம் ஊராட்சியில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவையை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.ராகுல் நாத், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை செயல் ஆட்சியர் ஜவஹர் பிரசாத், வட்டாட்சியர் ராஜேஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறைசார்ந்த அலுவலர்கள், ஆலை நிர்வாகிகள், விவசாய பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பேரிடர் காலங்களில்

# மக்களை நாடிச்சென்று நலஉதவிகள் வழங்குபவர் முதல்வர்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.16-

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பேரிடர் காலங்களில் மக்களை நாடிச் சென்று நலத்திட்ட உதவிகளை வழங்கி வருபவர் முதலமைச்சர் அவர்கள் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.12.2023) திரு.வி.க. நகர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதிகளில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட 5,500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித் தொகையினை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.12.2023) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓட்டேரி, செல்லப்பா தெரு, புளியந்தோப்பு, காந்தி நகர், கிரே நகர், கிருஷ்ண பிள்ளை தெரு, பெரம்பூர் ஜமாலியா ஆகிய பகுதிகளில் 4,000 குடும்பங்களுக்கும், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு, டோபி கானா, கெங்கு ரெட்டி சாலை மற்றும் நேவல் மருத்துவமனை சாலை ஆகிய பகுதிகளை சேர்ந்த 1,500 குடும்பங் களுக்கும் ஆக மொத்தம் 5,500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகையினை வழங்கினார்.

**கொட்டித் தீர்த்த கனமழை!**

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

வரலாறு காணாத வகையில் சென்னையில் 47 ஆண்டுகளுக்குப் பிறகு கொட்டித் தீர்த்த கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு வழங்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எங்கெல்லாம் அபய குரல் கேட்டதோ அங்கெல்லாம் ஆதரவுகரம் நீட்டி, இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்து, அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை அனைவரையும் களத்திலே இறக்கி அரசு அதிகாரிகள் துணையோடு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இரண்டே நாட்களிலேயே 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இயல்பு வாழ்க்கை திரும்பியதை அனைவரும் அறிவீர்கள். மேலும், அரசின் நிதியுதவி வருவதற்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல் திராவிட முன்னேற்ற கழகம் மணி ஓசையோடு மக்களுக்கு உதவுகின்ற நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

**மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர்!**

குறிப்பாக, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. தாயகம் கவி, மண்டலக்குழுத் தலைவர், மாநகராட்சி உறுப்பினர்கள், திமுக பகுதி கழகச் செயலாளர்கள் சாமிக்கண்ணு, தமிழ்வேந்தன், கழக நிர்வாகிகள் சசிகுமார், வெங்கடேசன் போன்ற அனைவரும் முழுவதுமாக வெள்ளம் பாதித்த நாளிலிருந்து களத்திலே நின்று மக்களுக்கு ஆதரவுக்



கரம் நீட்டி, திறம்பட செயலாற்றி தேங்கி நின்ற மழை நீரை வெளியேற்றுதல், கழிவு நீர் அடைப்பை சீர் செய்தல், ஒரு சில இடங்களில் விழுந்து கிடந்த மரங்களை சரி செய்தல், மின்சார தடை ஏற்பட்டுள்ள இடங்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்தல், தெரு விளக்குகளை விரைவாக எரிய வைப்பதிலும் முழு கவனம் செலுத்தி பணியாற்றியதனால் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்பி, மட்டற்ற மன மகிழ்ச்சியோடு இன்றைக்கு காணப்படுகின்றார்கள்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் ஏற்பட்டுள்ள சேதத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரியிருக்கின்ற நிவாரண நிதி ரூ. 12,659 கோடியை ஒன்றிய அரசு விடுவிக்குமென்று நம்புகின்றோம். ஏனென்றால் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மத்திய குழுவே பாராட்டி சென்றிருக்கின்றது. மீட்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் ராணுவ நடவடிக்கை போல் முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு இருப்பதை உணர்ந்து மத்திய குழு பாராட்டி இருக்கின்றது. அந்த வகையில் தமிழகத்தினுடைய வெள்ள சேதாரங்களை நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் ஈடு செய்வார்கள். கடுமையான இந்த பொருளாதார நெருக்கடியிலும் நிவாரண உதவியாக ரூ.6000 அறிவித்த முதலமைச்சர் அவர்களை மக்கள் மனதார மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றனர். அனைத்து தரப்பினரும் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களை வாழ்த்துகின்ற நல்லதொரு சூழல் நிலவிக் கொண்டிருக்கின்றது. சென்னையில் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பி அன்றாட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி இது போன்ற இயற்கை பேரிடர்கள், கொரோனா போன்ற காலங்களில், மக்களை நாடிச் சென்று நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆறுதல் கூறிய கரங்கள் ஒன்று உண்டென்றால் அது முதலமைச்சர் அவர்களின் கரங்கள்தான். அவர் பாதையிலே எங்களுடைய பயணம் தொடரும்.

**6 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி!**

மகளிர் உரிமைத்தொகையானது ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு எப்படி எந்த விதமான சிறு புகாரும் இல்லாமல், யாரையும் அலைக்கழிக்காமல் வழங்கப்பட்டதோ அதுபோல் திட்டமிட்டு செயலாற்றுவதில் தமிழகத்திற்கு நிகராக ஒன்றியத்தில் எந்த மாநிலத்தையும் சொல்ல முடியாது. அந்த வகையில் மக்களுக்கு எந்த விதமான சிரமமும் இல்லாமல் 6 ஆயிரம் ரூபாய் வெள்ள நிவாரண நிதி முறையாக வழங்குவதற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு நியாய விலை கடைகளிலும் இருக்கின்ற குடும்ப அட்டைகளுக்கு ஏற்றார் போல் ஒரு நாளைக்கு எத்தனை நபர்கள் என்று பிரித்து, கூட்ட நெரிசல் இல்லாமல் மக்களை அலைய வைக்காமல் ஒழுங்குபடுத்தி தருவதற்கு உண்டான திட்டமிடலை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முந்தைய தினம் அளித்த பேட்டியில் கூட நிவாரண உதவி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவோம், குடும்ப அட்டை இல்லாதவர்களுடைய கோரிக்கைகளையும் பரிசீலனை செய்வோம் என்று சொல்லி இருக்கின்றார். அந்த வகையிலே பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு முடிவெடுப்பார் என்று தெரிவித்தார்.

கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் குடியிருப்பு, நேதாஜி நகர் மற்றும் அகரம் ஆகிய பகுதிகளில் நோய் தொற்று ஏற்படாமல் தடுக்கும் வகையில் அப்பகுதி மக்களுக்கு அப்பல்லோ மருத்துவமனையும், கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து நேற்று முதல் 4 நாட்களுக்கு காய்ச்சல், இரத்த அழுத்தம், இரத்த பரிசோதனை, ஈசிஜி ஆகிய பரிசோதனைகளுடன் கூடிய சிறப்பு மருத்துவ முகாமை நடத்தி வருகிறது. இம்மருத்துவ முகாமை பார்வையிட்ட இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அங்கு சிகிச்சை பெற்ற மக்களுக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்த மருந்து மாத்திரைகளுடன், பிரட், ரஸ்க் ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், ஒன்றிய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழ்ச்செல்வி சசிகுமார், அம்பேத் வளவன், நாகராஜன், சுந்தர்ராஜன், திருமதி தாவூத்பீ மற்றும் ஐ.சி.எப்.முரளி, மகேஷ் குமார், சந்துரு, சாமிக்கண்ணு, தமிழ்வேந்தன், சசிகுமார், வெங்கடேசன், ஜார்ஜ்குமார், சுரேஷ், புஷ்பராஜ், தினார் ஆறுமுகம், ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மருத்துவர் ஆர்.எம்.முபாரக் - எல்.டி.என்.சரவணன் தலைமையில்

# மதுரவாயல் தொகுதி மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, டிச.16-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தொகுதி மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம் இன்று (16.12.2023, சனிக்கிழமை) காலை 9 மணி முதல் 10 மணி வரை சுப்பிரமணியசுவாமி நகர் 3-வது தெருவில் நடைபெறுகிறது.

இந்த முகாமில் பொது மருத்துவ பரிசோதனை, காலரா, தடுப்பு சிகிச்சைகள், டெட்டனாஸ் தடுப்பூசிகள், பூஞ்சை தொற்று தடுப்பு சிகிச்சை, சேற்றுப்புண் தடுப்பு மருந்துகள், வயிற்றுப்போக்கு தடுப்பு சிகிச்சைகள், பருவமழை கால காய்ச்சல், தொற்று மற்றும் தொற்றா நோய் சிகிச்சைகள் அளிக்கப்படும்.

மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர்- சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி மருத்துவ முகாமை துவக்கி வைக்கிறார்.

மருத்துவ அணி தொகுதி அமைப்பாளர் மருத்துவர் ஆர்.எம்.முபாரக், மருத்துவ அணி தொகுதி துணை அமைப்பாளர் எல்.டி.என். சரவணன், ஆகியோர் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஆ.மோசஸ், வி.விஜயன், ஆர்.சேகர், செ. ராமையா, ம.சிவா, கி.முரளி, ஜி.விமலாசேகர், வி.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர். முரளி கிருஷ்ணன், கே. குமார், ப.சரவணன், மோ.சுந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மேலும் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., அ.ம.துரைவீரமணி, இராமாபுரம் வ.செல்வக்குமார் எம்.சி., மருத்துவர் என். அணிஷ் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரவாயல் தொகுதி மருத்துவ அணி தி.மு.க. சார்பில் அமைப்பாளர் ஆர்.எம். முபாரக், மருத்துவ அணி துணை அமைப்பாளர் எல்.டி.என்.சரவணன் ஆகியோர் செய்துள்ளனர்.



தமிழக முதமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மிக்ஜாம் புயலில் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் சட்ட மன்ற தொகுதி, புழல் ஒன்றிய விளங்காடுப்பக்கம் ஊராட்சியில் பெரிய தெரு, மேட்டுத்தெரு, மல்லி மாநகர், தர்காஸ், சிருங்காவூர், அம்பேத்கர் நகர், அம்பாள் நகர், கண்ணம்பாளையம், ராஜீவ் காந்தி நகர், பள்ளிக்குப்பம், துரைசெட்காலனி, விளங்காடுப்பாக்கம், ஜெயராஜ் நகர், ஆர்.கே.நகர், ஹவுசிங் போர்டு, நியூ ஸ்டார் சிட்டி, கோமதி அம்மன் நகர் பாப்பம்மாள் நகர், சோனியா அவென்யூ, சாய் நகர், தாய் அப்பார்ட்மெண்ட், பிரியா நகர், போஸ் நகர், லட்சுமி நகர், அண்ணா நகர், ஆகிய பகுதிகளில் 14.12.2023 அன்று 5000 குடும்பங்களுக்கு விளங்காடுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன் ஏற்பாட்டில் புழல் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் புழல் பெ.சரவணன் தலைமையில் சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., 5000 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி வழங்கினார்.

DMK IT WING

# முதலமைச்சர் வழிகாட்டுதலில் பேரிடரில் துணை நின்ற தி.மு.க. ஐ.டி. விங் வார் ரூம்!

மிக்ஜாம் புயலால் வரலாறு காணாத கனமழையை சென்னை எதிர்கொண்டது. புயலின் தாக்கத்திற்கு முன்பே சென்னையில் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததுடன், நீர் நிலைகளும் நிறைந்திருந்தன. மிக்ஜாம் புயல் மிக மெதுவாக நகர்ந்த காரணத்தால், சென்னையின் வானத்திற்கு மேல் மேகக்கூட்டம் நீண்ட நேரம் நிலைத்திருந்து, கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நாள் முழுவதும் கனமழைக் கொட்டித் தீர்த்தது. மூன்று நாட்களில் 70 செ.மீ. மழையை சென்னைக் கண்டது இதுவே முதல் முறை. சென்னையில் உள்ள ஆறுகள், கால்வாய்கள் ஆகியவை நிரம்பியிருந்ததாலும், மழை நீரை கடல் உள்வாங்காததாலும் குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்தது.



கனமழையால் பாதிப்புக்குள்ளான சென்னையின் பெரும்பான்மையானப் பகுதிகள் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நிர்வாகத்தால் மறுநாளே இயல்பு நிலைக்குத் திரும்பின. மற்ற பகுதிகளில் மீட்பு பணிகள் உடனடியாக விரைவுபடுத்தப்பட்டன. மழை நீர் வெள்ளமாகத் தேங்கிய இடங்கள், தண்ணீர் வடியாத காரணத்தால் மின்சாரம் வழங்க முடியாத சூழல், செல்போன் சிக்னல்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட சவாலான சூழல் நிலவியது.

அத்தகைய நெருக்கடியான நிலையில், முதலமைச்சர் அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், கண்காணிப்பு அறைக்கு நேரில் சென்று மக்களின் குரல்களைக் கேட்டு மேற்கொண்ட செயல்பாடுகளும் வெள்ள நீர் தேங்கிய பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு நம்பிக்கையை அளித்தது. விரைவாக மீட்புப் 'பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிவாரணங்கள் வழங்கப்பட்டன. இதனை, மழைவெள்ள பாதிப்புகளை பார்வையிட வந்த ஒன்றிய அரசின் குழுவே பாராட்டியிருப்பது, திராவிட மாடல் அரசின் முதலமைச்சருடைய நிர்வாகத் திறனின் வெளிப்பாடு.

முதலமைச்சர் அவர்களின் விரைவான நடவடிக்கைகளுக்குத் துணை நிற்கும் வகையில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி.ராஜா தனது எக்ஸ்(ட்விட்டர்) பக்கத்தில், சென்னையின் பாதிப்புக்குட்பட்ட பகுதிகள் உதவி தேவைப்படுவோர் குறித்த விவரங்களைத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். அவருடைய அலுவலக எக்ஸ் பக்கத்திலும், ஐ.டி.விங் பக்கத்திலும் கோரிக்கைகளை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் கழக ஐ.டி.விங் சார்பில் வார் ரூம் ஒன்று அமைக்கப்பட்டது. சமூக வலைத்தளத்தில் விடுக்கப்படும் கோரிக்கைகளைக் கண்டறிந்து, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவிடும் வகையில், டிசம்பர் 5 முதல் அவசரகால உதவி மையம் (வார் ரூம்) அமைத்து பொதுமக்களுக்கு தேவையான மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொண்டது கழகத் தகவல் தொழில்நுட்ப அணி.

வார் ரூமிற்கு தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் வாயிலாக வந்த கோரிக்கைகளையடுத்து, யாருக்கு உதவி தேவை என்பதை அறிந்து, அவர்களின் இருப்பிடம் உடனடியாகக் கண்டறியப்பட்டு, அப்பகுதியில் உள்ள அரசு மாநகராட்சி பணியாளர்கள், கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் முனைப்பாக செயல்பட்டார் அணியின் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா.



24X7 என்ற முறையில் பகல்இரவு பாராது செயல்பட்ட இந்த வார் ரூமுக்கு உதவி கேட்டு வந்த மொத்த கோரிக்கைகள் 5ஆயிரத்து689 ஆகும். இதில் 4ஆயிரத்து 266 கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களை மீட்டும் அவர்களுக்குத் தேவையான உதவிகளும் செய்யப்பட்டுள்ளன. மொத்த கோரிக்கைகளில் 74.9% அளவிற்கு நிறைவேற்றப் பட்டுள்ளன.

மழை வெள்ளம் சூழ்ந்த பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், துரைப்பாக்கம், வேளச்சேரி, மணலி, திருவொற்றியூர், முடிச்சூர், எண்ணூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி, கொடுங்கையூர், திரு.வி.க.நகர், பெரம்பூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிகளவில் கோரிக்கைகளை எதிர்கொண்டது முதலமைச்சர் வழிகாட்டுதலில் உருவாக்கப்பட்ட விங்2.0 வார் ரூம்.

வெள்ளம் சூழ்ந்த இடத்திலிருந்து தங்களை வேறு இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் 263 பேர் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவசரமாக மருத்துவ உதவி தேவைப்பட்ட 47 பேர் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து பத்திரமாக மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

உணவுகுடிநீர்பால் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை வலியுறுத்தி வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் 45ஆயிரம் உணவுப் பொட்டலங்கள், குடிநீர் பாட்டில் மற்றும் பால் பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

பெட்ஷீட், பாய், நாப்கின் உள்ளிட்ட பிற அத்தியாவசியப் பொருட்கள் ஏறத்தாழ 15000 அளவில் வழங்கப்பட்டுள்ளன.

வேளச்சேரி பகுதியில் மழை வெள்ளத்தில் வெவ்வேறு குடியிருப்புகளில் சிக்கியிருந்த 3 கர்ப்பிணி பெண்கள் டிசம்பர் 6 அன்று மீட்கப்பட்டனர். அவர்களில் வேளச்சேரி ராம்நகர் பகுதியில் இருந்து அணியின் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கு வந்த கோரிக்கையின் அடிப்படையில் அணியின் மாநில துணைச் செயலாளர் மதுரை பாலா தலைமையிலான நிர்வாகிகள் நேரில் சென்று, அந்தப் பெண்மணியை மீட்டு அழைத்துச் சென்று, மருத்துவமனையில் சேர்க்க உதவினர். மறுநாள், அந்தப் பெண்மணிக்கு குழந்தை பிறந்து, தாயும்சேயும் நலமுடன் இருக்கும் தகவலை அவர்களின் குடும்பத்தினர் நன்றியுடன் தெரிவித்தனர்.

ராம் நகரில் இருந்து தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அவர்களுக்கு வந்த கோரிக்கையின் அடிப்படையில், அவரது வழிகாட்டுதலில், மழை வெள்ளம் சூழ்ந்த பகுதியிலிருந்து ஒரு பெண்மணியை தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் மதுரை பாலா தலைமையிலான நிர்வாகிகள் பொக்லைன் மூலம் மீட்டு பாதுகாப்பான இடத்தில் சேர்த்தனர். தனக்கு புதிய பணி கிடைத்திருந்த நிலையில், முதல் நாள் வேலைக்கு உரிய நேரத்தில் சென்று சேர கழக அரசு துணை நின்றதை அலைபேசி மூலம் நெகிழ்ச்சியான குரலில் தெரிவித்தார் அந்தப் பெண்மணி.

திரைக்கலைஞர் சாந்தனு பாக்யராஜ் தனது எக்ஸ்(ட்விட்டர்) பக்கத்தில் பார்வை மாற்றுத்திறனாளி ஒருவரை மீட்க வேண்டும் எனப் பதிவிட்டிருந்தார். அதனைக் கவனித்த கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர். பி.ராஜா, விங் 2.0 வார் ரூம் நிர்வாகிகள் மூலமாக, சம்பந்தப்பட்டவர் வசிக்கும் மடிப்பாக்கம் பகுதிக்குட்பட்ட கழகத்தின் 176வது வட்டத்தின் மாமன்ற உறுப்பினர் ஆனந்தன் வேதம் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்க, அந்தப் பார்வை திறனாளி விரைந்து மீட்கப்பட்டார். இதனைப் பாராட்டி எக்ஸ் பக்கத்தில் சாந்தனு பாக்யராஜ் பதிவிட்டிருந்தது முதலமைச்சர் தலைமையிலான அரசும் கழகமும் மக்கள் நலனில் காட்டுகின்ற அக்கறைக்கு நற்சான்று.

திருநின்றவூர் பகுதியில் பெண்கள் நிறைந்திருந்த குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்திருந்த நிலையில் அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் ஆகியவற்றுடன் சானிட்டரி நாப்கின்களையும் வழங்கி உதவினார் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் பத்மப்ரியா அவர்கள்.

கொடுங்கையூரில் சூழ்ந்த மழை நீரால், முதுகுத் தண்டு பிரச்சினை உள்ள முதியவர் ஒருவர் மருத்துவமனைக்கு செல்ல முடியாத நிலையில் இருக்கிறார் என்ற தகவலை யூடியூப் சேனல் ஒன்று வெளியிட, அதனைக் கவனித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அணியின் துணைச் செயலாளர் மதுரை பாலாவினை களத்திற்கு அனுப்பினார். அந்த முதியவர் மற்றும் அவரது குடும்பத்தின் நிலையறிந்து, உடனடியாக ஆம்புலன்ஸை வரச் செய்து, அந்த முதியவர் விரும்பிய மருத்துவமனையில் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்தார் பாலா. இந்தப் பணியில், மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும் மருத்துவத் துறையினரும் உறுதுணையாக இருந்தனர்.

ராம் நகர், துரைப்பாக்கம், திருவொற்றியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தங்களை மீட்கக் கோரியவர்களை பேரிடர் மீட்புக் குழு மூலமாகவும், கழக நிர்வாகிகள் மூலமாகவும் மீட்டது விங்2.0 வார் ரூம்.

பள்ளிக்கரணை, பெரம்பூர், வியாசர்பாடி, மகாகவி பாரதிநகர் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் வடிவதற்கான மோட்டார் பம்ப் வசதிகள், உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் ஆகியவற்றை சென்னை பெருநகர மாநராட்சி நிர்வாகம் வாயிலாகவும், கழக நிர்வாகிகள் வாயிலாகவும் கிடைக்கச் செய்தது.

சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுத்ததன் வாயிலாக விங் 2.0 வார் ரூமுக்கு வருகின்ற அழைப்பு களின் எண்ணிக்கை குறைந்து, நிறைவுக்கு வந்தது. எனினும் ஒரு சில தொழிற்பேட்டைகள், வணிகத் தலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பது குறித்த தகவல்கள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு வர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு150, கணேஷ் நகர் பகுதியில் உள்ள சுமார் 120 தொழிற்சாலைகளை சூழந்திருந்த வெள்ள நீர் குறித்து, வார் ரூமிற்கு கிடைத்த தகவல் பரிமாறப்பட்டதையடுத்து டிசம்பர் 11அன்று சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு துறை சார்ந்த அதிகாரிகளை வலியுறுத்தி, மோட்டார் பம்புகள் மூலம் உடனடியாக மழைநீரை அகற்றிடச் செய்தார். இந்தப் பகுதியில் மழை நீர் தேங்கினால் இரண்டுமூன்று வாரங்கள் கழித்தே வடியும் சூழலில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு விரைந்து செயல்பட்டு இயல்பு நிலைக்கு கொண்டு வந்தது.

சமூக வலைத்தளத்தில் வெளியான கோரிக்கைகளை உடனுக்குடன் கவனித்து, அவற்றின் உண்மைத் தன்மையை உறுதி செய்து, உரிய இடத்திற்கு விரைந்து உதவிகள் கிடைக்கச் செய்து, தளத்திலும் களத்திலும் தன் பங்களிப்பை செலுத்தியுள்ளது முதலமைச்சர் அவர்களின் முழுமையான வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், திருத்தியமைக்கப்பட்ட சீர்மரபினர் நல வாரியத்தின் தலைவரும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், துணைத் தலைவர் இராசா. அருண்மொழி மற்றும் அரசு சாரா உறுப்பினர்கள் கே.எஸ்.ராஜ்கவுண்டர், சேகர், பசுவை சக்திவேல், முனுசாமி, எஸ்.கணேசன், கே.எஸ். கண்ணன், கதிர்வேல், பண்ணப்பட்டி கோவிந்தராஜ், ப.சந்திரன், சூர்யா பி.தங்கராஜா, பெரி. துரைராசு, திருமதி. பாண்டீஸ்வரி மற்றும் பெரியசாமி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரிஷ் தக்கர், மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலர் வா. சம்பத், , ஆகியோர் உடனிருந்தனர்



மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயல் – மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச்செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஏற்பாட்டில் புத்தகரம் கடப்பா தெருவைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி, போர்வை உள்ளிட்ட பொருட்களை நிவாரணமாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மேயர் பிரியா மற்றும் பலர் உள்ளனர்.



புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எர்ணாவூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து, அங்குள்ள தெருக்கள் வீடுகளுக்கு சென்று வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை பொதுமக்களிடம் நேரடியாக கேட்டறிந்து, மேலும், அவர்களுக்கு துணை நிற்கின்ற விதமாக, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று உறுதியளித்தார். உடன் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (15.12.2023) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, சென்னை, காமராசர் அரங்கத்தில் 1.1.2024 அன்று நடைபெறவுள்ள "மகா கவிதை" நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழையும், நூலினையும் வழங்கினார். உடன் அவரது மகன்கள் மதன்கார்க்கி, கபிலன் வைரமுத்து ஆகியோர் உள்ளனர்.



கனமழையின் போது சென்னை மணலியில் உள்ள சி.பி.சி.எல். எண்ணெய் சுத்திகரிப்பு மையத்திலிருந்து ஏற்பட்ட எண்ணெய் கசிவினை அகற்றும் பணிகளை எண்ணூர் நெட்டுக்குப்பம் முகத்துவாரப் பகுதியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து, இந்தப் பணிகளை ஒருங்கிணைத்து வரும் தமிழ்நாடு அரசின் எண்ணெய் கசிவு மேலாண்மை ஒருங்கிணைப்பு மையத்திற்கு சென்று, கழிவுகளை சுத்தம் செய்யும் பணிகளின் நிலவரத்தைக் கேட்டறிந்து, எண்ணெய் கழிவால் படகு – மீன்பிடி வலை உள்ளிட்டவை சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மீனவர்கள் அவரிடம் கூறினர். அவர்களுக்கு துணைநிற்கிற வகையில் கழக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார். உடன் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மேயர் பிரியா மற்றும் பலர் உள்ளனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் சேலம் 2வது மாநில மாநாட்டில்

# தி.மு.க. மாணவர் அணியினர் திரளாகப் பங்கேற்போம்!

## மாணவர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!


சென்னை, டிச.16-

கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டினை முன்னிட்டு, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுடன் கடந்த (14.12.2023) வியாழக்கிழமை, மாலை 5 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக, கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா. அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அனைத்து மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும் பங்கேற்றனர்.

அதில், வருகிற 24.12.2023 அன்று கழக இளைஞர் அணி சார்பில் சேலத்தில் நடைபெறவுள்ள 2வது மாநில மாநாட்டினை தலைமையற்று நடத்தும் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும், விழாவில் சிறப்புரையாற்றவுள்ள கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கவிருக்கும் மாநில உரிமை மீட்பு என்ற முழக்கத்தை வென்றெடுக்கும் போர்க்களமாக இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்டி, ஒன்றிய அரசை அமைக்கும் சூழலை தீர்மானிக்கும் சக்தியாக கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் இருப்பார் என்ற நம்பிக்கையோடு கழக மாணவர் அணி பெரும் பணியாற்றிட உறுதி ஏற்று, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கக் மாநாட்டில் கழக மாணவர் அணியின் சார்பாக பெருந்திரளான மாணவர்களுடன் பங்கேற்பதென தீர்மானிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில், இந்திய அரசியலில் திருப்புமுனை மாநாடாக, தமிழ்நாட்டு வரலாற்றில் தடம் பதிக்கக் கூடிய மாநாடாக நடைபெறவுள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டினை துவக்கி வைக்கும் பெருமைமிகு வாய்ப்பை கழக மாணவர் அணியின் செயலாளர் சி.வி. எம்.பி. எழிலரசனுக்கு வழங்கிய கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநாட்டின் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை கழக மாணவர் அணி தெரிவித்துக் கொள்கிறது.



மிக்ஜாம் புயல் மற்றும் கன மழையால் ஏற்பட்ட பாதிப்பை சீரமைக்க, கழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த சூழலில், அரசின் மீட்பு – நிவாரணப் பணிகளுக்கு உதவிடும் வகையில், 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'–க்கு நடிகர் வடிவேலு ரூ.6 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

# உடன்பிறப்பே... 36

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நன்னிலம் நடராசன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நன்னிலம் நடராசன்: நகைச்சுவையால் கொள்கை ஊட்டியவர்!



ஓவியம் : ரவி பேலட்

“பெரியோர்களே, தாய்மார்களே.. நண்பர்களே.., இளைஞர் அணியைச் சேர்ந்த தம்பிமார்களே...” என ஒரு கரகரத்த குரல் மெல்லிய ஓடைபோல கழக மேடைகளில் ஒலிக்கத் தொடங்கும். தொண்டர்கள் சிரிப்பலைகளை எதிர்பார்த்திருக்கும் நேரத்தில் அவரது பேச்சு, வாகனத்தின் உச்ச வேகத்தைபோல ஏறும். தொண்டர்கள் சிரித்து மாள்வார்கள். முதல்முறையாக அந்தப் பேச்சைக் கேட்பவர்கள் கிறங்கிய தேனீயாகத் திளைப்பர்.

கழக மேடைகளில் கலைஞர், பேராசிரியர் எனத் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்கள். அல்லது தலைமைக் கழக நிர்வாகிகள் செல்வார்கள். அதற்கு முன்னர் தொண்டர்களைத் தயார்படுத்துவது, தலைவர்கள் வரும் வரை அவர்களைச் சோர்வடையாமல் உற்சாகமாக வைப்பது என மேடைகளைத் தன்வசப்படுத்துவது கழக முன்னணி தளகர்த்தர்களின் வழக்கம். அப்படி மேடைகளைத் தன்வசம் செய்த முன்னணிக் கள வீரர்களில் ஒருவர்தான், நன்னிலம் நடராசன்.

“இளமைப் பருவம் முதல் இறுதி நாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவைப் பேச்சால் தமிழகத்தின் பட்டித்தொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்” என கழகம் போற்றிய தளகர்த்தர், அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்குரிய உடன்பிறப்பு, இந்த நன்னிலம் நடராசன்.

## நகைச்சுவைப் பேச்சாளர்

நெற்களஞ்சியம் என உணவுப் படியளக்கும் டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்திலுள்ள அபிவிருத்தீசுவரம் கிராமத்தில் பிறந்தவர் நன்னிலம் நடராசன். தந்தை அண்ணாசாமி அவர்களுக்கும், தாயார் தனபாக்கியம் அவர்களுக்கும் 1928-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி பிறந்தவர் நடராசன்.

இளம் வயதிலேயே அரசியல் ஆர்வம் கொண்டிருந்தவர், அந்தப் பகுதியில் தீவிரமாகப் பரவிக் கொண்டிருந்த திராவிடர் கழகச் செயல்பாடுகளில் ஆர்வம் கொண்டு, ஈடுபடத் தொடங்கினார். இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு கொண்டிருந்த நடராசன், தனது பேச்சுக்களில் அரசியல் கருத்துகளைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

திராவிடர் கழகம், திருவாரூர், கலைஞர் என சுழலத் தொடங்கிய அவரது வட்டம், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதும், அதில் இணைந்து சுற்றத் தொடங்கியது. அவரது சொந்த ஊரில் சைக்கிள் கடை வைத்து தொழிலைச் செய்தவர், கழக மேடைகளில் பம்பரமாகச் சுற்றத் தொடங்கினார்.

## நாவன்மையும் நடை வன்மையும்

கழகம் எனும் ஆலமரத்தின் அடிவேர்களில் ஒன்றாக விளங்கிய நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக் காக்க, செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள், நன்னிலம் வட்டத்தில் கழகத்தை ஆல் போல் வளர்த்தார். அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அவர் கால்படாத ஊர்களே இல்லை எனும் அளவுக்குக் கழகம் வளர்த்தவர்.

**இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை.**

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் பங்கேற்றவர் நடராசன். நெருக்கடி நிலை காலத்தில் ஜனநாயகம் காத்திட, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைக் கொடுமையை அனுபவித்தார்.

பெயர் அறியாத சிற்றூர்களுக்கும், கால்நடையாக நடந்து சென்று கழகக் குரலைக் கடத்தியவர் நடராசன். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் எழுதியதையும் பேசியதையும் பாமர மக்களுக்கு இன்னும் எளிமையாக, தனது நகைச்சுவையான பேச்சுத் திறனால் கொண்டு சேர்த்தவர். கழகத்தை மேடைகளில் பேசியே வளர்த்த பெருமைக்குரியவர்களில் ஒருவராக விளங்கியவர் நன்னிலம் நடராசன். அவரது மேடை ஆளுமையே நடராசனுக்கு, ‘நன்னிலம் நடராசன்’ என அடைமொழியைக் கொண்டு வந்தது.

“நாவன்மை படைத்த நன்னிலம் நடராசன் தமிழகத்தின் நகரங்களில் மட்டுமல்ல, பட்டி தொட்டிகளில் கழகக் கொள்கைகளை மேடை தோறும் முழங்கி வந்தவர். படித்தவர்கள் மட்டுமல்ல, பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் நகைச்சுவையோடு பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்” என கலைஞரால் புகழப்பெற்றவர்.

## சன்மானமும் கடன்காரர்களும்

எந்தச் சோதனைகள் வந்தாலும் சோர்வு காணாத உள்ளம் கொண்டவர். சட்டமன்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் மன்றத்திலேயே தமது பணியினைத் தொய்வின்றி ஆற்றி வந்தவர். அவர் ஏற்றுக் கொண்ட இயக்கம் தி.மு.கழகம். அவர் நெஞ்சார ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் கலைஞர் என நின்ற தளகர்த்தர் நடராசன்.

எதையும் எதிர்பார்க்காத இவரது தியாகத்தைப் பாராட்டிப் போற்றும் வகையில், 1991-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘கலைஞர் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் கரங்களாலேயே வழங்கிச் சிறப்பித்தார்.

கழகத்தின் கொள்கைப்பரப்பு இணைச் செயலாளராகச் சுழன்ற நன்னிலத்தாருக்கு, 1999-ஆம் ஆண்டு ‘பெரியார் விருது’ அளிக்கப்பட்டது. அப்போது பேசிய தலைவர் கலைஞர் அவர்கள், விருதுடன் ஒரு லட்சம் ரொக்கத் தொகை அளிக்கப்படுகிறது என அறிவித்தார். விருது பெற்றதும் பேசிய நன்னிலம் அவர்கள், “தலைவர் எனக்கு விருதுடன் பணம் அளிப்பதை மேடையிலேயே சொல்லிவிட்டார். இதைக் கேட்டதும், நாளை என் வீட்டு வாசலுக்குக் கடன்காரர்கள் வந்து நிற்பார்கள். அதனால் நான் ஊருக்குப் போவதா, சென்னையிலேயே தங்கி விடுவதா என யோசனையில் இருக்கிறேன்” என தனது நகைச்சுவைப் பேச்சால் கலைஞரையே கட்டிப்போட்டவர்.

## மருத்துவமனை தங்காத மனம்

அவர் கடைசியாகக் கலந்துகொண்ட கூட்டம், 2002 ஜனவரி 25-ஆம் தேதி, ஒரத்தநாட்டில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் நினைவுக்கூட்டம். அவர் கலந்து கொண்ட கடைசித் திருமண நிகழ்வு, இன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுடையது. கழகம், கலைஞர், கழக மேடைகள், கோடானகோடி கழகத் தொண்டர்களின் கரவொலி, சிரிப்புமழை என நிம்மதி கொண்டவர் நடராசன்.

சிறிது உடல் நலம் குன்றி இருந்தவர், 2002 மார்ச் மாதம் 12-ஆம் தேதி இயற்கையில் கலந்தார். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், உடல்நலம் குன்றிய நிலையில் அண்ணா அறிவாலயம் வந்து, கலைஞரைச் சந்தித்தார். கலைஞர் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வைத்து சிகிச்சையில் சேர்த்தார். ஆனால், நன்னிலமோ எல்லாம் சரியாகிவிடும் என மருத்துவமனையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டார். அதையறிந்து கலைஞர் அவரது ஊருக்கு போன் செய்து கடிந்து கொள்கிறார். இப்படித் தலைவன் - தொண்டன் உறவினைக் கொண்டிருந்த கொள்கைத் தங்கம் என, அவர் குருதியில் கொண்டிருந்த கழக உணர்வை, கலைஞரைச் சந்தித்து ஆற்றுப்படுத்திக் கொண்ட நிகழ்வை, அவர் மறைவின்போது கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்பு துயர காவியமாகத் துக்கம் கொண்டிருந்தது..

“நன்னிலம் என்றாலே நன்னிலம் நடராசன் என்று பெருமை சேர்த்த கொள்கைத் தங்கம் மறைந்துவிட்டார்” என கலைஞர் அவரது குரலில் ஓர் இரங்கற்பா வெளியிட்டார். இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை. அவற்றைக் காத்து வைக்கும், கழகத்தின் வீரர் சபை.

...துடிக்கும்


## தகவல்களின் முழுமை!

சமூக ஊடகங்கள் செய்திகளைத் தருபவை அல்ல. அவை தருவது எல்லாம் வெறும் தகவல்கள். அந்தத் தகவல்களில் இப்போது இன்னொரு பரிமாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுதான் ‘செர்ரி பிக்கிங்’ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும், அரைகுறை தகவல்கள். அதாவது, ஒரு நிகழ்வு பற்றிய செய்தியிலிருந்து முழுமையான தகவல்களைத் தராமல், தங்கள் அரசியலுக்குத் தோதான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கம்பு சுற்றுவது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணம், சபரிமலைக்குச் சென்றுவிட்டு, தனது தந்தையைக் காணவில்லை என்று கதறிய சிறுவனின் வீடியோ. இணையத்தில் வைரலாகி வரும் அந்தக் காட்சி மூலம், கேரள கம்யூனிஸ்ட் கட்சி, இந்துக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது என்று வதந்தி பரப்பப்படுகிறது.

ஆனால், உண்மையில் நடந்தது என்ன? சபரிமலைக்கு அப்பாவுடன் வந்த மகன், ஒருகட்டத்தில் அப்பாவைக் காணவில்லை என்று அழ, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்கள், அவனது தந்தையைக் கண்டுபிடித்து அவரிடம் பையனை ஒப்படைக்கிறார்கள். இவை அனைத்தும் அங்கிருந்த ஒருவர் எடுத்த வீடியோவில் பதிவாகியுள்ளது. ஆனால், உண்மைத் தன்மையை அறியாமல் வீடியோவின் ஒரு பகுதியை மட்டும் வெட்டி வதந்தி பரப்பப்படுகிறது. இதுவும் ஒரு வகையில் பொய்ச் செய்திதான் என்றாலும், இதர பொய்ச் செய்திகளை விடவும் மிகவும் ஆபத்தானது. ஏனென்றால், இது செய்தி எனும் முலாமைப் பூசிக் கொண்டு வருகிறது. எனவே சமூக ஊடக நுகர்வில் கவனம் தேவை!

## ஃப்ளாஷ்பேக்



## வாழ்த்தும் பொற்கிழியும்!



சிதம்பரம்

1976-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ‘மிசா வழக்கு நிதி’ சேகரிக்க, மதுரைக்கு வருகை தந்த போது சமயநல்லூர் கிளைக் கழகம் சார்பாக, தலைவரிடம் வழக்கு நிதி வழங்கி வாழ்த்துப் பெற்றேன். இன்றைக்கு என்னுடைய வயது 82. தலைவர் கலைஞரின் பேரன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையால் பொற்கிழி பெற்றபோது பழைய நினைவுகள் எல்லாம் என் மனதில் நிழலாடுகின்றன.

**-எஸ்.சிதம்பரம், அவைத் தலைவர், சமயநல்லூர் கிளை, மதுரை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மருத்துவக் கல்வி மறுமலர்ச்சிக்கு நூறாண்டு!

**1923-ஆம் ஆண்டு நீதிக்கட்சி இரண்டாவது முறையாக வெற்றி பெற்று, மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சராக பனகல் அரசர் மீண்டும் பொறுப்பேற்றவுடன், மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவை என்ற கட்டுப்பாட்டினைத் தகர்த்தார். சென்னையில், முதன்முதலாக இந்திய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தியவரும் அவர்தான். அவற்றின் மூலம் தமிழ் மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில்வதில் மறுமலர்ச்சி உருவானது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 330




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131